புதன்பொய்கை

தங்கம் விலை ஏறுமுகம்
விரிவு பக்கம்:- 05

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 91

புதன்கிழமை
25 பெப்ரவரி 2026

மாசி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# கிவுல் ஓயாவின் நோக்கம் சிங்களக் குடியேற்றமல்ல!

### அமைச்சர் சந்திரசேகர் விளக்கம்



**கிளிநொச்சி, பெப்ரவரி 25**

**கிவுல் ஓயா திட்டத்தின் நோக்கம் சிங்களக் குடியேற்றமல்ல. மாறாக, விவசாயத்துக்குத் தேவையான தண்ணீரை சேமிப்பதே என்று அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.**

»15

கிவில் ஓயா தொடர்பில்

## தூதரகங்களிடம் முறையிட முடிவு

யாழ்ப்பாணம், பெப். 25

கிவுல் ஓயா திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் அதனால் ஏற்படும் பெரும் பிரச்சினைகள் தொடர்பில் சர்வதேச அமைப்புகளிடமும், தூதரகங்களிடமும் முறையிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தின் ஒழுங்கமைப்

»15

கிளிநொச்சி

## பொருளாதார மத்திய நிலையத்தை மேலும் வினைத்திறனாக்கத் திட்டம்

### பிரதியமைச்சர் உபாலி தகவல்

கிளிநொச்சி, பெப். 25

கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையத்தை மேலும்வினைத்திறனாக்குவதற்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று, கூட்டுறவுத்துறை பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

»15

இந்த வருடத்தில்

## 500,000 சுற்றுலாவிகள் இதுவரை குவிந்தனர்

கொழும்பு, பெப். 25

ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து கடந்த வார இறுதிவரை நாட்டுக்கு 5 லட்சத்துக்கு மேற்பட்ட சுற்றுலாவிகள் வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள

»15

போதைப்பொருள் ஒழிப்பு

## நான்கு மாதங்களில் 102,900 பேர் கைது!



கொழும்பு, பெப். 25

நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்தின் கீழ், கடந்த நான்கு மாதங்களில் ஒரு லட்

»15

## மண்டைதீவு மைதானம்; திட்டம் கைவிடப்படாது!

### அரசாங்கம் விடாப்பிடி



கொழும்பு, பெப். 25

யாழ்ப்பாணம் மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தை அமைக்கும் திட்டம் கைவிடப்படாது என்று, அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் விளையாட்டு வளா

»15

வவுனியாவில் அதிர்ச்சி

## எரியுண்ட நிலையில் சடலமொன்று மீட்பு!

### குற்றப் பின்னணி இருக்கலாம் என தீவிர விசாரணையில் பொலிஸார்

வவுனியா, பெப். 25

வவுனியா - ஈரப்பெரியகுளம் மயானத்தில், பகுதியளவில் எரியுண்ட நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

»15

## தூக்குத் தண்டனை அமுல்; தீர்மானிக்கவில்லை அரசு!

கொழும்பு, பெப். 25

இலங்கையில் மரண தண்டனைகளை அமுல்படுத்துவது குறித்து அரசாங்கம் இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை - என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்கத் தகவல் திணைக்களத்

»15

## ராஜீவ் அரசைத்தான் எதிர்த்தது ஜே.வி.பி.!

### இந்தியாவை அல்ல என்று ரில்வின் சில்வா விளக்கம்



கொழும்பு, பெப். 25

ராஜீவ் காந்தியின் அரசாங்கத்தை மட்டுமே ஜே.வி.பி. எதிர்த்தது. மாறாக இந்தியாவை அல்ல என, ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர் ரில்வின் சில்வா தெரிவித்

»15

## புலம்பெயர் அமைப்புகளின் இடைத்தரகராகவே பிரதமர்

### சமன் பிரிய கண்டுபிடிப்பு

கொழும்பு, பெப். 25

புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் இடைத்தரகராக பிரதமர் ஹரிணி செயற்படுகின்றார் என, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சமன் பிரிய ஹேரத் விமர்சித்துள்ளார்.

இலங்கையின் அண்மைக்கால அரசியற் களநிலைவரங்கள் தொடர்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சமன் பிரிய ஹேரத் நேற்று ஊடக சந்

»15

முச்சந்தி முரளி

"முதலையும் மூர்க்கனும் மட்டுமில்ல திசைகாட்டிக்காரரும் கொண்டது விடாயினம் போல"

## தொழில் முயற்சியாளர்களுக்கு முழுமையான ஆதரவு கிட்டும்!

### புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் வாக்குறுதி

புதுக்குடியிருப்பு, பெப். 25

புதுக்குடியிருப்பில் பல்வேறுபட்ட தொழில் முயற்சிகளுக்கான வாய்ப்புக்கள் உள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த அனைவரும் முன்வர வேண்டும் - இவ்வாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இராசரட்ணம் விஜயகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'வளமான நாடு, வளமான வாழ்க்கை' என்ற அரச கொள்

»15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4357 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 23 24 33 44 |
| விசேட எழுத்து | Z |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1424 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 08 49 53 56 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0383 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 1 0 0 0 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2463 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 22 |
| வெற்றி இலக்கங்கள் | 04 33 50 75 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6115 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 7 6 9 6 3 2 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2145 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 04 12 19 48 |
| விசேட எழுத்து | R |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0231 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 16 39 61 |

# உள்நாட்டு உற்பத்தியை இரட்டிப்பாக்க வேண்டும்


## அமைச்சர் பிமல் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.25**
**நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்கவேண்டும் எனப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஒதுக்கப்படும் நிதி ஒரு தெளிவான கவனம் மற்றும் இலக்குக்கு இணங்கச் செலவிடப்படாவிட்டால், எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அடையமுடியாது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்குவதே பிரதான நோக்கமாக உள்ளது.

நெதர்லாந்து, பெல்ஜியம், பின்லாந்து மற்றும் ஐஸ்லாந்து போன்ற நாடுகள் உள்கட்டமைப்பைப் பொறுத்தவரை ஒரு 'முழுமை பெற்ற' நிலையில் இருப்பதாக விவரிக்கப்படுகிறது. அந்த நாடுகளில் வாய்க்கால்கள், மதகுகள் அல்லது பாலங்கள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்புகளை உருவாக்கவேண்டிய அவசியம் மிகக் குறைவாகவே உள்ளது- என்றார். (எ-இ)



# பிரமிட் நிதி மோசடியில் ஈடுபட்ட சீனர்கள் கைது

கொழும்பு, பெப்.25
இலங்கையில் விசாக் காலம் முடிந்தும் தங்கியிருந்து சட்டவிரோத ஒன்லைன் பிரமிட் பாணி நிதிமோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 16 சீனப் பிரஜைகள் கருவாத்தோட்டம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து, 23 மடிக் கணினிகள், 11 கையடக்கத் தொலைபேசிகள், ஏழு ரவுட்டர்கள், ஒன்பது குரல் மாற்றிகள்,3 ஆயிரத்து 280 வெளிநாட்டுச் சிகரெட்டுகள் என்பன பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. ஜாவத்தா சாலை, கொழும்பு 05 மற்றும் டொன் கரோலிஸ் சாலை ஆகிய முகவரிகளில் தற்காலிகமாக வசித்துவந்த சீனப் பிரஜைகள் குழு ஒன்று சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது என்று பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. இந்தத் தகவலின் அடிப்படையில், பொலிஸார் சோதனை மேற்கொண்டனர். அவர்களது வீடுகளில் சோதனை நடத்தியதில் மடிக்கணினிகள் மற்றும் பிற உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில், இந்தச் சந்தேகநபர்கள் இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் வெளிநாடுகளுடன் தொடர்புகொண்டிருந்தனர் என்பதும், பிரமிட் மோசடிகள் மூலம் பல்வேறு நபர்களை ஏமாற்றி வந்தமையும் தெரியவந்துள்ளது. (எ-இ)

# இந்த ஆண்டில் மட்டும் 12,165 டெங்குத் தொற்றாளர்கள்

கொழும்பு, பெப்.25
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் 12 ஆயிரத்து 165 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் மட்டும் 889 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். டெங்கு நோயாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டுள்ள பகுதிகளை இலக்குவைத்து இந்த விசேட கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் பணிப்பாளர் டாக்டர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார். கொழும்புக்கு மேலதிகமாக மாத்தறை, காலி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கொழும்பில் நேற்று முதல் மூன்று நாள்களுக்கு விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-இ)

# நியமனங்களுக்கு அனுமதி

கொழும்பு, பெப்.25
இரண்டு தூதுவர் பதவிகளுக்கும் ஒரு அமைச்சின் செயலாளருக்கும் வழங்கப்பட்ட நியமனங்களுக்கு நாடாளுமன்றத்தின் உயர் பதவிகள் தொடர்பான குழுவில் அனுமதி வழங்கப்பட்டது.

நாடாளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் கூடியபோதே இந்த ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

எத்தியோப்பியா கூட்டாட்சி ஜனநாயகக் குடியரசுக்கான இலங்கைத் தூதுவராகவும், ஆபிரிக்க ஒன்றியத்துக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகவும் நிர்மலா இந்துமதி டயஸ் பரணவிதானவை நியமிப்பதற்கும், ஈரான் இஸ்லாமியக் குடியரசுக்கான இலங்கையின் புதிய தூதுவராக பேராசிரியர் மொஹமட் இப்ராஹிம் பஸீஹா அஸ்மியை நியமிப்பதற்கும் குழு அங்கீகாரம் அளித்தது.

இதற்கு மேலதிகமாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கே.ஏ. விமலேந்திரராஜாவின் நியமனத்துக்கும் உயர் பதவிகள் பற்றிய குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0823 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கம் | 1 0 1 6 5 2 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3089 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 35 36 38 53 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 03 10 35 79 |
| வெற்றி வாரம் | 5250 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0919 |
| வெற்றி இலக்கம் | 05 25 33 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| | கும்பம் |
| வெற்றி இலக்கம் | 06 07 39 60 |
| சீட்டிழுப்பு வாரம் | 4801 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 17 |
| வெற்றி இலக்கம் | 21 42 49 58 |
| வெற்றி வாரம் | 2265 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 24.02.2026 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 05 07 20 64 |
| வெற்றி வாரம் | 2915 |



# இந்த ஆண்டில் மட்டும் 44 யானைகள் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.25
இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதிவரையில் 44 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என்று வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. துப்பாக்கிச்சூடு, ரயில் விபத்துகள், நீரில் மூழ்கியமை, விசம் கொடுக்கப்பட்டமை, அங்கீகரிக்கப்படாத மின் கம்பிகளில் சிக்கியமை போன்ற காரணங்களால் யானைகளின் உயிரிழப்புகள் நடந்துள்ளன.

அதேவேளை, அண்மைய நாள்களில் காட்டுயானைகளின் தாக்குதல்களில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். (எ-இ)

# சுற்றிவளைப்புகளில் 592 பேர் கைது

கொழும்பு, பெப்.25
நாடளாவிய ரீதியில் பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 592 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுற்றிவளைப்புகளில் 29 ஆயிரத்து 3 பேர் சோதனைக்குட்படுத்தப்பட்ட நிலையில், நேரடியான குற்றங்களுடன் தொடர்புடைய 13 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிடியாணைகளுக்கமைய 286 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 187 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதேவேளை, மது போதையில் வாகனம் செலுத்திய 296 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 75 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### 6 வருடமாகப் புறக்கணிப்பு

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் சுங்க அதிகாரிகள்

**கொழும்பு,பெப்.25**

**இலங்கைச் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நீண்டகாலமாகத் தாமதிக்கப்பட்டுள்ள தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக எச்சரித்துள்ளனர்.**

நேற்றுமுதல் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து சுங்க அலுவலகங்களிலும் கறுப்புப் பட்டி அணிந்து கடமைகளில் ஈடுபட சுங்க அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். சுங்க தொழிற்சங்கக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- கடந்த 6 வருடங்களாகச் சுங்க அதிகாரிகளுக்கான பதவியுயர்வுகள் எவ்வித நியாயமான காரணமுமின்றித் தாமதிக்கப்பட்டுள்ளன. தமது கோரிக்கைகளுக்கு வெறும் வாய்மொழி வாக்குறுதிகளன்றி, நம்பகமான எழுத்துமூலத் தீர்வுகள் உடனடியாக வழங்கப்படவேண்டும். சுங்க அதிகாரிகள் தமது கடமைகளிலிருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டால், அது நாட்டைப் நெருக்கடிக்குள்ளாக்கும். இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் முடங்குவதால் அரசாங்கத்தின் வருமானம் கடுமையாகப் பாதிக்கப்படும். இந்தப் போராட்டத்தால் ஏற்படும் அனைத்துப் பாதிப்புகளுக்கும் பொறுப்புகளைத் நிறைவேற்றத் தவறிய உயர் அதிகாரிகளே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் - என்றுள்ளது. பிரச்சினைகள் தொடர்பில் வரும் 26ஆம் திகதி நிதி அமைச்சு, பொதுச் சேவை ஆணைக்குழு உள்ளிட்ட பல தரப்பினருடன் விசேட கலந்துரையாடல்ஒன்று நடத்தப்படவுள்ளது. அதன் முடிவுகளுக்கு அமைய எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுங்க தொழிற்சங்கக் கூட்டணியின் பிரதிநிதிகள் கூடி, தமது தொழிற்சங்க நடவடிக்கையின் அடுத்தகட்டத் தீர்மானங்களை எடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## கணித பாடப் பரீட்சைக்கு தோற்றிய 81 வயது முதியவர்

கொழும்பு,பெப்.25

81வயதுடைய முதியவர் ஒருவர் தற்போது நடைபெற்று வரும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்.

கிரிபெரியாவைச் சேர்ந்த 81 வயதான நிமல் சில்வா என்ற வயோதிபரே இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றியவராவார். ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கத்திற்கு ஒரு வலுவான செய்தி இதன் மூலம் அனுப்பப்படுகிறது.

அடிப்படை எண்கணிதத்திலிருந்து தற்போதைய பாடத்திட்டம் விலகிச் செல்லப்படுகின்றது.

இன்றைய தேர்வுகளில் பல கேள்விகள் சிக்கலான வடிவங்களால் ஆதிக்கம் செலுத்துகின்றன, அவை மாணவர்களுக்கு கல்வி கற்பதற்குப் பதிலாக குழப்பத்தை ஏற்படுத்துகின்றன-என்றார். (ச)

## இறுதி செய்யப்பட்டது தரம் 6 கற்றல் தொகுதி

கொழும்பு, பெப்.25

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஆறாம் தரத்துக்கான புதிய கற்றல் தொகுதிகள் இறுதிசெய்யப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சின் செயலாளர் நலக கலுவெவ தெரிவித்துள்ளார். புதிய கற்றல் தொகுதிகளின் இறுதி மதிப்பாய்வு மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. புதிய பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆசிரியர்களைத் தயார்ப்படுத்தும் வகையில், அவர்களுக்கு விளக்கமளிப்பதற்கான விசேட பயிற்சித் திட்டங்கள் வரும் நாள்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன. நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் ஆறாம் தர மாணவர்களுக்காக இந்தப் புதிய கல்வித்தொகுதிகளை அடுத்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## லாப்ஸ் எரிவாயு விநியோகத்தில் தடையில்லை



சந்தையில் எரிவாயு கொள்கலன்களின் விநியோகம் தடையின்றித் தொடர்கின்றது என லாப்ஸ் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. அம்பாந்தோட்டையிலுள்ள 30,000 மெற்றிக்தொன் கொள்ளளவு கொண்ட எரிவாயு இறக்குமதி முனையத்தில் ஏற்பட்ட தற்காலிகத் தடையால் வழமையான இறக்குமதி நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டது. சர்வதேச விநியோகஸ்தர்களுடன் இணைந்து எரிவாயுக் கப்பல்களை நேரடியாகக் கொழும்புத் துறைமுகத்துக்குத் திசைதிருப்ப மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய எரிவாயு கையிருப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ஐக்கிய நாடுகள் சபையால் 2 இலட்சம் பேருக்கு உதவிகள்

கொழும்பு, பெப்.25

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு உதவும் வகையில், ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான முன்னுரிமைகள் திட்டத்தின் கீழ் இதுவரை 2 இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பயனடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் 2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்வரை மிகவும் பாதிக்கப்படக்கூடிய 6 இலட்சத்து 58 ஆயிரம் பேருக்கு உதவுவதை இந்தத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. இதுவரை உதவி பெற்றவர்களில்பெரும்பான்மையானோர் பெண்கள் என்பதுடன், 4 ஆயிரத்து 400 மாற்றுத்திறனாளிகளும் உள்ளடங்குகின்றனர். 25 மாவட்டங்களில் 69 பங்காளர் அமைப்புகளின் ஊடாக இந்த நிவாரணப்பணிகள் முன்னெடுக்கப் [illegible] (ச-இ)

## ஒருநாள் கூத்துக்கு....!

**ஒருநாள் கூத்துக்கு ஊரிலை இருக்கிறவை எல்லாரையும் சிரைச்ச கதையா, ஒரேயொரு கூட்டத்துக்கு கோடிக்கணக்கில சிலவழிச்சிருக்கினம் உந்தத் திசைகாட்டிக்காரர். முந்தின அரசாங்கங்கள் மக்களின்ர வரிப்பணத்தில கும்மாளம் போடுது எண்டு சொல்லிப்போட்டு, 'சிஸ்டம் சேஞ்ச்' கொண்டு வர்றம் எண்டு வந்தவை இப்ப தாங்களும் அதே வேலையைத்தான் செய்யத் தொடங்கியிருக்கினம். தைப் பொங்கலுக்கு அடுத்தநாள் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில 'போதைப்பொருளை ஒழிக்கிறதுக்காக' ஜனாதிபதி அநுரவின்ர தலைமையில ஒரு கூட்டம் நடந்ததெல்லோ. அந்தக் கூட்டத்துக்குத்தான் ஒரு கோடியே பத்து லட்சத்துச் சொச்சம் ரூபாவை சிலவழிச்சிருக்கினமாம் எங்கட சிக்கன ஆட்சிச் சிங்கங்கள்.**

**கூட்டத்துக்கு வாற சனம் இருக்கிற கொட்டகை, விருந்தினர்மார் இருக்கிற மேடை, டெக்கிறேசன் எண்டு அதுக்கு ஒரு 51 இலட்சம் ரூபா, கூட்டத்துக்கு தானா வந்தவைக்கும், வலிஞ்சு பஸ்களில ஏத்திக் கொண்டந்து இறக்கினவைக்கும் குடிக்க, கொறிக்க எண்டு அதுக்கொரு 31 இலட்சம் ரூபா, சனத்தை ஏத்தி இறக்கின பஸ்ஸூக்கே 23 இலட்சம் ரூபா எண்டு உந்த ஒரு கோடியே பத்து லட்சத்துச் சொச்சத்துக்கும் கணக்குக் காட்டியிருக்கினமாம். இதுக்கிடையில மீசாலையில வீடமைப்புத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டுறதுக்கெண்டு அநுரவும் பரிவாரங்களும் பதினொரு பஸ்ஸில போயிருக்கினம். அதுக்கும் லட்சக்கணக்கில சிலவாம். அந்தக் காசில அந்த வீட்டுத்திட்டத்தில இன்னும் ரண்டு வீட்டக் கூடுதலாக்கட்டிக் குடுத்திருக்கலாமே.**

**முந்தின அரசாங்கங்கள் கொள்ளையடிச்சவை எண்டதுக்காக, இவையள் 'நாங்கள் கொஞ்சம் குறைவாச் செலவு செய்யிறம்' எண்டு சொல்லுறதைச் சனம் ஏற்றுக்கொள்ளுமெண்டு நினைக்கினம் போல. உந்த நொண்டிச் சாட்டை வைச்சுக்கொண்டு, இப்ப இவையளும் அதே பகட்டு அரசியல்தானே செய்யினம். அநுரவின்ர பதவியேற்புக்கு வெறும் 25 ஆயிரம் தான் முடிஞ்சதெண்டு ஊரெல்லாம் பறைதட்டின இதே திசைகாட்டிக்காரர்தான், சக்கடத்தார் மாதிரி அத்தனை பேரும் ஏறிவிழுந்த சொகுசுக் குதிரையில தாங்களும் ஏறுவம் எண்டு ஒற்றைக்காலில நிக்கினம்.**

**ஊழல் அற்ற அரசு, இலஞ்சமற்ற ஆட்சி எண்டு சொல்லுறதெல்லாம் வெறும் வாய்வார்த்தையில மட்டும் தான். மக்களின்ர வரிப்பணத்தில, ஒரேயொரு கூட்டத்துக்கு வந்தவைக்காக இலட்சக்கணக்கில மலசலகூடத்துக்கும், தண்ணிக்கும் உந்த அரசாங்கம் கணக்குக் காட்டுறதைச் சனம் பாத்துக்கொண்டு சும்மா இருக்காது. மாற்றம் எண்டது மேடையில போடுற விளம்பரத்தில இல்லை, ஒவ்வொரு சதத்தையும் பாவிக்கிற விதத்தில தான் இருக்கு. ஆட்சி தான் மாறியிருக்கு, ஆனால் காட்சி மாறேலை கண்டியளோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# KTM மோட்டார் சைக்கிள்களுடன் வீதிகளை மீண்டும் உயிர்ப்பூட்டிய DPMC

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடெட் நிறுவனம் (DPMC) ஐந்து வருட கால இடைவெளியின் பின்னர் KTM மோட்டார் சைக்கிள்களைப் பெருமையுடன் இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இது உயர்தர செயற்றிறன் கொண்ட மோட்டார் சைக்கிள் துறைக்கு திருப்புமுனையாக அமைந்திருப்பதுடன், உலகத்தரம் வாய்ந்த போக்குவரத்துத் தீர்வுகளை வழங்குவதில் நிறுவனத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

நவீன ரக KTM மோட்டார் சைக்கிள்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வு பத்தரமுல்லையில் உள்ள DPMC நிறுவனத்தின் காட்சிக்கூடத்தில் இடம்பெற்றது. மிகவும் எதிர்பார்ப்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்வானது பிரதான மோட்டார் சைக்கிள் துறையின் புதுப்பிக்கத்தக்க ஆர்வத்தை வெளிப்படுத்தியதுடன், உலகில் அதிகமாகக் கொண்டாடப்படும் உயர்ந்த செயற்றிறனைக் கொண்ட மோட்டார் சைக்கிள் வர்த்தகநாமம் இலங்கையின் வீதிகளுக்கு மீண்டும் திரும்புகின்றது என்ற அறிவிப்பை விடுப்பதாகவும் அமைந்தது.

இறக்குமதிக் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் DPMC நிறுவனம் 3,000 இற்கும் அதிகமான பல்வேறு வகையான KTM மோட்டார் சைக்கிள்களை வெற்றிகரமாக விற்பனை செய்திருந்தது. உள்ளூர் சந்தையில் அதிக கேள்வியைக் கொண்ட மோட்டார் சைக்கிளாக இது விளங்கியது. கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக புதிய இறக்குமதிகள் இல்லாதபோதும், ஏற்கனவே நாட்டில் இருந்த KTM மோட்டார் சைக்கிள்கள் தமது சிறந்த செயலாற்றலை வெளிப்படுத்தத் தவறவில்லை. DPMC நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஒப்பிடமுடியாத விற்பனைக்குப் பின்னரான சேவை, தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட வாடிக்கையாளர் ஒத்துழைப்பு என்பன இதற்கு மேலும் வலுச்சேர்த்தன. இந்த உறுதிப்பாடு, தற்போதைய KTM உரிமையாளர்களுக்குத் தொடர்ந்து உச்ச செயற்றிறன், நம்பகத்தன்மை மற்றும் திருப்தியான அனுபவம் என்பவற்றை வழங்குகின்றது.

KTM மோட்டார் சைக்கிள்கள் ஐரோப்பாவின் முதற்தர பந்தய மோட்டார் சைக்கிள் வர்த்தக நாமமாக உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன், அதன் உயர்ந்த வினைத்திறன் மிக்க செயற்பாடு மோட்டார் சைக்கிள் துறையில் அதனைத் தொடர்ந்தும் உறுதியான இடத்தில் பேணிவருகின்றது. இதன் காரணமாக MotoGP, Dakar Rally, மோட்டார் பந்தயங்கள் மற்றும் சர்வதேச மோட்டார் பந்தயத் திடல்கள் பூன்ற முன்னணி பந்தயங்களில் KTM மோட்டார் சைக்கிள்கள் தனக்கான தனியிடத்தை உறுதிசெய்து வருகின்றன. அதுமாத்திரமன்றி இந்தியா, நேபாளம் போன்ற பிராந்திய சந்தைகள் மற்றும் உலகின் 80இற்கும் அதிகமான சந்தைகளிலும் இது உறுதியான பிரசன்னத்தைக் கொண்டுள்ளது. KTM இன் பந்தைய பாரம்பரியம் மற்றும் பொறியியல் சிறப்பு என்பன உலகளாவிய ரீதியில் உள்ள வாகன ஓட்டிகள் மற்றும் பந்தைய நிபுணர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது.

இந்த மீள் அறிமுக நிகழ்வின் ஓர் அங்கமாக Duke 160, Duke 250 மற்றும் Adventure 390 X போன்ற மூன்று பிரதான வகைகள் இலங்கைச் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. உயர்ந்த வினைத்திறனான செயற்பாட்டை வழங்கும் வகையில் அவை வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், வாகன ஓட்டிகளை இலக்காகக் கொண்ட தொழில்நுட்பத்திற்கு இணங்கும் வகையில் இவை தயாரிக்கப்பட்டுள்ளன. உலகளாவிய ரீதியில் விளையாட்டு மற்றும் சுற்றுலா மோட்டார் சைக்கிள் பிரிவுகளில் தொடர்ந்தும் முன்னிலை வகிக்கும் KTM மோட்டார் சைக்கிள்கள், வாகன ஓட்டிகளுக்கு அதிக வேகம், வடிவமைப்பு, கட்டுப்பாடு மற்றும் தனித்துவமான ஓட்ட அனுபவத்தை வழங்குகிறன.

கவர்ச்சிகரமான, சிறந்த வடிவமைப்பு மற்றும் ரேசிங்கிற்கு ஏற்றவகையிலான பொறியியல் கட்டமைப்பு போன்றவற்றுக்குப் பெயர் பெற்ற KTM சைக்கிள்கள், சக்தி வாய்ந்த ஆறு வேகங்களைக் கொடுக்கும் கியர் கட்டமைப்பைக் கொண்ட வெப்பத்தைக் குறைக்கும் திரவத்தைக் உள்ளடக்கிய இயந்திரம், கனம் குறைந்த வெளிக்கட்டமைப்பு மற்றும் சீரான கட்டுப்பாடு மற்றும் வேகமூட்டுதலை வழங்கும் வகையில் மேம்பட்ட WP APEX USD சஸ்பென்ஷன் கட்டமைப்பு என்பவற்றைக் கொண்டமைந்துள்ளன. குறிப்பிட்ட சில வகை மோட்டார் சைக்கிள்கள் டுவல் டிஸ்க், டுவல் சனல் ABS உடன் நான்கு பிஸ்டன் ரேடியல் கலிபர்கள், சுயமான ஓட்ட மோடுகள் (Supermoto ABS உட்பட), ரைட்பைவயர் சிஸ்டம், ஸ்லிப்பர் க்ளச், க்குவிக்ஷிஃப்டர்+, நவீன TFT வண்ண திரைகள் மற்றும் பல வசதிகளைக் கொண்டுள்ளன. இதனால் அதிகரித்த பாதுகாப்பு மற்றும் சிறந்த பயண அனுபவம் என்பவற்றை அனுபவிக்கமுடியும்.

KTM மோட்டார் சைக்கிள்களுக்கான இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர் என்ற ரீதியில் DPMC நிறுவனம், நாடு முழுவதிலுமுள்ள விஸ்தரிக்கப்பட்ட காட்சியறைகள் மற்றும் சேவை வலையமைப்புக்களைத் திட்டமிட்டிருப்பதுடன், அதில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விரிவாக்கமும் அடங்கியுள்ளது. இதனால் நாடளாவிய வாடிக்கையாளர்களுக்கு எளிதான அணுகல் உறுதி செய்யப்படுகிறது. நிறுவனம் பயிற்சி பெற்ற தொழில்நுட்பக் குழுக்கள், அசல் உதிரிப்பாகங்கள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட வாடிக்கையாளர் சேவையுடன் பிரசித்திபெற்ற சேவை ஆதரவை முழுமையாக வழங்கத் தயாராக உள்ளது. இதன் காரணமாக மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் மீண்டும் ஒப்பிடமுடியாத அனுபவத்தை அனுபவிக்கலாம்.

உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமங்கள் மற்றும் முற்றும் முன்னணி போக்குவரத்துத் தீர்வுகளை இலங்கையிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு கொண்டுவருவதில் DPMC தொடர்ந்து செயற்படுகின்றது என்பது இதன் மூலம் மீண்டும் உறுதியாகின்றது.

மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள 0114700600 என்ற இலக்கத்திற்கு அழைக்கவும் அல்லது www.dpmco.com என்ற இணையத்தளத்திற்கு விஜயம் செய்யவும் அல்லது KTM Sri Lanka என்ற முகப்புத்தகப் பக்கத்தில் தொடரவும்.

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்காலத்துக்குப் பயன்தரும் வகையில் முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்ப விஷயமாக சிலருக்கு வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு வீண் அலைச்சல் ஏற்படவும் அதனால் உடல் அசதி உண்டாகவும் கூடும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அலுவலகத்தில் உங்கள் ஆலோசனையை அதிகாரிகள் ஏற்றுக் கொள்வார்கள்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படக்கூடும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள்.

**துலாம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல்ஆரோக்கியத்தில்கவனம் தேவை. சிலருக்குத் தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது இழுபறியாகும்.

**மீனம்:** மகிழ்ச்சியான நாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். கடன்களில் ஒரு பகுதியைத் தந்துமுடிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# காவியுடைக்குள் ஒளிந்திருக்கும் இனவாதம்

சகிப்புத்தன்மையையும் அமைதியையும் போதித்த கௌதம புத்தரின் பெயரால் இலங்கைத் தீவின் அரசியலில், வன்முறையும் வெறுப்பும் விதைக்கப்படுவது ஒரு தீராத சாபக்கேடாக மாறியுள்ளது. பிக்குகளைக் கட்டுப்படுத்த எவராலும் முடியாது என்றும், தேசியப் பாதுகாப்புக்காக முன்னிற்பதற்குத் தயங்கப்போவதில்லை என்றும் பொதுபலசேனாவின் பொதுச்செயலாளர் ஞானசார தேரரின் கூற்று, உண்மையில் நாட்டுப்பற்றின் வெளிப்பாடா அல்லது பௌத்த தர்மத்தின் பெயரால் அதிகாரத்தைச் சுவைக்கும் ஒரு முயற்சியா என்பதைச் சிந்திக்கவேண்டிய தருணம் இது. பிக்குகள் என்பவர்கள் வெறும் 'தானம்' மட்டும் பெறுபவர்கள் அல்ல என்று வாதிடும் இவர்கள், புத்தர் துறந்த அந்த அரச அதிகாரத்தையும், உலகியல் பற்றையும் மீண்டும் கைகளில் ஏந்துவது அவர் காட்டிய 'மத்திம வழிக்கு' அப்பட்டமான துரோகமாகவே பார்க்கப்படவேண்டும்.

இலங்கையில் இனப்பிரச்சினை என்பது தீர்க்க முடியாத ஒரு புதிராக நீண்டுகொண்டே செல்வதற்கு, கடந்த காலங்களில் பிக்குகளின் பெயரால் முன்னெடுக்கப்பட்ட அரசியல் தலையீடுகளே பிரதான காரணமாகும். ஒரு மதத்தின் பாதுகாவலர்களாக இருக்கவேண்டியவர்கள், ஒரு குறிப்பிட்ட இனத்தின் போர்வீரர்களாகத் தங்களைச் சித்திரித்துக் கொள்ளும்போது, அங்கு பல்லினக் கலாசாரத்தின் அடிப்படை அத்திபாரமே ஆட்டம் காணத்தொடங்குகிறது. 'இனவாதிகள்' என்ற முத்திரை தங்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதாக ஞானசார தேரர் ஆதங்கப்படுகிறார். ஆனால், சிறுபான்மை மக்களின் உரிமைகள் பேசப்படும் போதெல்லாம் வீதிக்கு வந்து இனவாதக் கோஷங்களை எழுப்புவதும், மதச் சுதந்திரத்துக்கு வேட்டுவைப்பதும் நற்பெயரை ஈட்டித்தரும் செயல்களா? புத்தபெருமான் ஒருபோதும் வெறுப்பினால் வெறுப்பை வெல்ல முடியும் என்று கற்பிக்கவில்லை. மாறாக, அன்பினாலேயே அகிலத்தை வெல்லமுடியும் என்றார். அந்த மகத்தான போதனையை மறந்துவிட்டு, தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையில் பிரிவினை வாதத்தைத் தூண்டுவது நாட்டுக்கு எத்தகைய சுபீட்சத்தையும் தந்துவிடாது.


இந்த நாடு பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் தவறான பாதையில் பயணிப்பதற்கு, மதவாதச் சிந்தனைகள் அரசியலுக்குள் ஊடுருவியதுதான் மிகமுக்கியமான காரணியாகும். பிக்குகள் தங்களின் ஆன்மிகப் பாதையில் பயணித்து, மக்களின் மன அமைதிக்காகவும் நல்வழிப்படுத்தலுக்கும் பங்காற்றினால் மட்டுமே இந்த நாடு உண்மையான சுபீட்சத்தை அடையும். அதை விடுத்து, 'பிக்குகள்' என்ற போர்வையில் அரசியல் தீர்மானங்களை எடுக்கும் அதிகார மையங்களாகத் தங்களை மாற்றிக்கொள்ள முயல்வது இலங்கையின் ஜனநாயகப் பண்புகளை அழித்துவிடும். அரசாங்கம் இத்தகைய கடும்போக்கு அமைப்புகளின் அச்சுறுத்தல்களுக்குப் பணியாமல், சட்டம் அனைவருக்கும் சமம் என்பதை நிலைநாட்டவேண்டும். காவியுடை என்பது பாதுகாப்புக்கான கவசம் அல்ல; அது துறவறத்திற்கான அடையாளம். இந்தப் பிக்குகள் நாட்டின் அரசியலில் தலையிடமால், தம்பாட்டில் இருந்தாலே இலங்கையின் பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டிவிடும்.



## பொய்யாமொழி

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்**

**பொருள்:** இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப் பெற்றால், பெண்ணைவிடப் பெருமையுடையவை வேறு என்ன இருக்கின்றன?




# மாகாணசபைத் தேர்தலுக்கான செயற்குழு வரவேற்கத்தக்கது



*தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு*

**கொழும்பு, பெப்.25**
**மாகாணசபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறைமையில் நடத்தலாம் என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நாடாளுமன்றத்தில் விசேட செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

மூன்று மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டால் அதனைத் தொடர்ந்து தேர்தலை நடத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுப்போம். மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் சகல தீர்மானங்கள் மற்றும்நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். மாகாணசபைத் தேர்தலை வெகு விரைவாக நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். மாகாணசபைத் தேர்தலை எந்தமுறையில் நடத்துவது என்பது பற்றி ஆராய்வதற்கு தற்போது விசேட செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவுக்கு முழுமையாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் முன்னிலையாகி எமது தரப்பு யோசனைகளையும் முன்வைக்கவுள்ளோம். இந்த விசேட செயற்குழு எதிர்வரும் மே மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். செயற்குழு அறிக்கை சமர்ப்பித்தவுடன் தேர்தலை விரைவாக நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை சட்டத்தின் அதிகாரத்துக்கமைய முன்னெடுப்போம் - என்றார். (ச-இ)

## கச்சதீவுத் திருவிழா; ஏற்பாடுகளும் பூர்த்தி

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான இறுதிக் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர், எதிர்வரும் 27 மற்றும் 28ஆம் திகதி நடைபெறவுள்ள கச்சதீவுத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.
இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து வருகைதரும் பக்தர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கான தங்குமிட வசதிகள், கூடாரங்கள், உணவு வசதிகள், பாதுகாப்பு, சுகாதாரத் தேவைகள், மலசலகூட வசதிகள், குடிநீர்த் தேவைகள், பாதுகாப்பு, கடல் மற்றும் தரைப் போக்குவரத்து ஒழுங்குகள், கழிவு முகாமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளும் இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது. (எ-இ)

## தங்கம் விலை ஏறுமுகம்

உலக சந்தையில் தங்கத்தின் விலையுடன் ஒப்பிடும்போது உள்நாட்டில் தங்கத்தின் விலை தொடர்ந்தும் அதிகரித்துள்ளது. நேற்றைய நிலைவரப்படி இலங்கையில் தங்கத்தின் விலை சுமார் 3 ஆயிரம் ரூபா அதிகரித்தது என்று சந்தைத் தரவுகள் தெரிவிக்கின்றன. 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 4 இலட்சத்து 9 ஆயிரத்து 600 ரூபாவை எட்டியுள்ளது. 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 3 இலட்சத்து 75 ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. (ச-இ)

## வெலிகம துப்பாக்கிச்சூடு; முன்னாள் பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு, பெப்.25
2023ஆம் ஆண்டு வெலிகம ஹோட்டலுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த முன்னாள் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தின் பின்னர் அவர் வெளிநாடு சென்றிருந்த நிலையில் அவர் நாட்டுக்குத் திரும்பிய போதே கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## ஆசியாவின் சிறந்த கடற்கரை; பட்டியலில் இலங்கைக்கு இடம்

ஆசியாவின் சிறந்த கடற்கரைகள் பட்டியலில் இலங்கையின் இரண்டு கடற்கரைகள் முதல் பத்து இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளன. உலகின் முன்னணி பயண வழிகாட்டித் தளமான Tripadvisor வெளியிட்டுள்ள 2026 ஆம் ஆண்டுக்கான 'பயணிகளின் தேர்வு விருதுகளில்' இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் மிரிஸ்ஸ கடற்கரை ஆசிய அளவில் 5ஆவது இடத்தையும், பெந்தோட்டை கடற்கரை ஆசிய அளவில் 7ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.
இந்த ஆண்டின் பட்டியலில் முதலிடத்தைத் தாய்லாந்தின் பனானாக் கடற்கரை பிடித்துள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தின் வாழ்வியலை சுமந்துவரும் அந்தோனி

யாழ்ப்பாணம், பெப்.25

இசைஞானி இளையராஜாவின் இசையமைப்பில் தென்னிந்தியத்திரைப்படங்களுக்கு ஈடாக, ஈழத்தின் வாழ்வியலைச் சுமந்து ஈழக்கலைஞர்களின் கலைப்படைப்பாக உருவாக்கப்பட்டுள்ள அந்தோனிதிரைப்படம் எதிர்வரும் மார்ச் மாதம் 13 ஆம் திகதி திரைக்கு வரும் என்று திரைப்பட ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஓசை பிலிம்ஸ்,கலைவளதி, விஜை பிலிம்ஸ் ஆகியவற்றின் பங்களிப்பில் உருவாக்கப்பட்டுள்ள அந்தோனி திரைப்படம் ஈழத்தின் முழுமையான படைப்பாக, நீளத்திரைப்படமாக மிகப்பெரும் நிதிச்செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழகம், இலங்கை மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தமிழ், சிங்களம், மலையாளம் ஆகிய மொழி களில் பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர் இளையராஜாவின் இசையமைப்பில் உருவாகியுள்ள ஈழத்திரைப்படத்தின் முதலாவது படைப்பாகும். இலங்கைத்தீவின் கடலோடிகளின் வாழ்வியலின் பிரதிபலிப்பாக தமிழ், சிங்கள, மலையாள மக்களின் வாழ்வியல் கலாசாரத்தை உலகுக்கு எடுத்துச் சொல்லும் கருவை மையமாகக் கொண்டது இந்தத் திரைப்படம். இலங்கைத்தீவின் முழுமையான உழைப்பின் கலைப்படைப்பு என்பதை உணர்ந்து ரசிகர்கள் ஆதரவை வழங்கவேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர். (க-66,20)

# சாந்தனின் நினைவுநாள்

யாழ்ப்பாணம்,பெப்.25

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 33 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்த பின்னர் விடுதலையான, சாந்தனின் இரண்டாவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தின் பின்புறமாகவுள்ள, இந்துமயானத்தில் அமைந்துள்ள சாந்தன் துயிலாலயத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-66)

# பல ஆயிரம் தொன் நிறையுடைய பழுதடைந்த சோளவிதைகள் மீட்பு

மன்னார், பெப்.25

உரிய அனுமதியின்றி வீதி மற்றும் தனியாருக்குச் சொந்தமான காணியில் உலரவிடப்பட்டிருந்த, பழுதடைந்த மற்றும் பூஞ்சைகள் நிறைந்த பல ஆயிரம் தொன் சோள விதைகள் மன்னார் சுகாதாரத்துறையினரால் கைப்பற்றப்பட்டன.

மன்னார் நடுக்குடாப்பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக அதிகளவான சோள விதைகள் உலர விடப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக, மன்னார் பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனை சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட சோதனையில், அவை மனிதநுகர்வுக்குப் பொருத்தமற்றவை என்று கண்டறியப்பட்டன.

அந்தக் களஞ்சியசாலைக்கோ, அதில் பணியாற்றும் ஊழியர்களுக்கோ எந்த ஒரு சட்ட அனுமதியோ அல்லது சுகாதார மருத்துவச் சான்றிதழோ பெறப்படவில்லை என்றும் விசாரணையில் கண்டறியப்பட்டது. இந்த சோள விதைகளைப் பயன்படுத்தி, சட்டவிரோத தரமற்ற சத்துணவைத் தயாரிப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்று அந்தப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இதுதொடர்பான மேலதிக நடவடிக்கைகளை சுகாதாரத் துறையினர் மேற்கொண்டுள்ளனர். (க-56)



# Invitation for Bids (IFB)
## VENGALACHEDDIKULAM PRADESHIYA SABHA PROVINCIAL SPECIFIC DEVELOPMENT GRANT AND MAINTENANCE ACTIVITY -2026

[1]. The Chairman, Divisional Procurement Committee (Div.PC), on behalf of Vengalacheddikulam Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the work(s) and goods listed in the table below.

| S. No | Bid No. | Source of Fund | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) | CIDA Grade Required | Required Bid Security | | Contract Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount (Rs.) | Validity Period | |
| 1 | PSDG/NP/VAV/VCKPS/2026/CWS/1-2 | PSDG | Establishing RO Plant system -VCKPS<br>Provision of Water supply facilities for Pavatkulam library - VCKPS | 3.32 | C9 & above (Building) | 33,500.00 | 28.05.2026 | 84 |
| 2 | PSDG/NP/VAV/VCKPS/2026/OS/1-3 | PSDG | Construction of Burning hut at Thaddankulam cemetery<br>Construction of fencing at Muthaliyarkulam Christian cemetery<br>Construction of Fencing at Anaivilunthan Muslim cemetery | 2.48 | C9 & above (Building) | 25,000.00 | 28.05.2026 | 84 |
| 3 | MA/NP/VAV/VCKPS/2026/LAR/P-I (05) | Maintenance activity | Renovation Mugaththankulam ground Road(NVVPE 407) - VCKPS<br>Renovation Krishthavakulam Main Road (NVVPE156)- VCKPS<br>Renovation Muthaliyarkulam Karampaimadu Veethy (NVVPE 216) - VCKPS<br>Renovation Neriyakulam Veppankulam main street (NVVPE 295) - VCKPS<br>Renovation Adappankulam Illupaikulamveethy (NVVPE 311) - VCKPS | 2.62 | C9 & above (highway) | 26,500.00 | 28.05.2026 | 84 |
| 3 | MA/NP/VAV/VCKPS/2026/LAR/P-II (05) | Maintenance activity | Renovation Veerapuram Sinnathampanai Road (NVVPE 245) -VCKPS<br>Renovation Pavatkulam Unit 4 School road (NVVPE 318) - VCKPS<br>Renovation sooduventhapilavu palaiyakudimanai Road (NVVPE 375) - VCKPS<br>Renovation Pavatkulam near Road (NVVPE342) - VCKPS<br>Renovation Thaddankulam 2nd Lane (NVVPE 145)- VCKPS | 3.62 | C9 & above (highway) | 36,500.00 | 28.05.2026 | 84 |
| 4 | PSDG/NP/VAV/VCKPS/2026/RE/02 | PSDG | Purchasing & fixing of Street lights for VCKPS area | 1.26 | SEA registration | 12,700.00 | 28.05.2026 | 35 |

[2]. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.

[3]. Interested eligible bidders may obtain further information from Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road [Email: cheddips@gmail.com] from 09.00 Hrs to 15.00 Hrs and inspect the bidding documents at the address Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road, Cheddikulam .

[4]. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the "Schedule/Bidding Data" of the Procurement Document for works and goods.

[5]. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar – Madawachchi Road Cheddikulam. from 25.02.2026 until 11.03.2026 from 09.00 Hrs to 15.00 Hrs. Upon payment of a non-refundable fee of Three Thousand Rupees (3000.00). The method of payment will be by cash.

[6]. Bids must be delivered to the address Chairman, Divisional Procurement Committee, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar-Madawachchi Road, Cheddikulam on or before 12th March 2026 and 14.00 Hrs. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.

[7]. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.

[8]. The pre-bid meeting will be held on 05.03.2026 at 14.00 Hrs at the Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar- Madawachchi Road, Cheddikulam.

The address (es) referred to above is (are):

Chairman,
Divisional Procurement Committee.
Vengala cheddikulam Pradeshiya Sabha,
Mannar-Madawachchi Road, Cheddikulam
[Telephone No: 024 2260914 Fax No: 024 2260913] 25.02.2026

(CR/47110) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியகுளம் அணைக்கட்டில் மூன்று இடங்களில் உடைப்பு

## உடனடியாகச் சீரமைக்கக் கோரிக்கை



**முல்லைத்தீவு, பெப்.25**
**சுமார் 75 ஏக்கர் வயல்நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யக்கூடிய பெரியகுளத்தின் அணைக்கட்டில், மூன்று இடங்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. எனவே உடனடியாக அவற்றைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

செம்மலைப்பகுதியில், மக்கள் குறைகேள் சந்திப்பை நடத்திய போது, பெரியகுளத்தின் அணைக்கட்டு உடைப்பெடுத்துள்ளது என்று அந்தப் பகுதி மக்களால், நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரியப் படுத்தப்பட்டது. கடல்நீர் குளத்துக் குள் உட்புகுவதால், வயல் நிலங் களுக்குப் பாதிப்பு ஏற்படும் அபாயமுள்ளது. கிராமத்தின் குடிதண்ணீரி லும் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. அத்துடன் குளத்தின் அணைக்கட்டு மயானத்துக்குச் செல்வதற்கான பாதையாகவும் உள்ளது. இதனால் இறந்தவர் களின் உடலை மயானத்துக்கு எடுத்துச்செல்வதில் செம்மலை மற்றும் செம்மலைக்கிழக்கு கிராம மக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்றும் மக்கள் சுட்டிக் காட்டினர்.

அதேவேளை செம்மலைக் கிழக்கு, புளியமுனைப்பகுதியில் பெருமளவில் விவசாய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கு காட்டுயானைகளின் கெடுபிடிகளால், விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் மக்கள் தெரிவித்தனர். மக்களின் பிரச்சினை களைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர், முல்லைத்தீவு மாவட்ட கமநல உதவி ஆணையாளரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார். குளக்கட்டுச் சீரமைப்பு மற்றும் யானைவேலி அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்த கமநல உதவி ஆணையாளர், எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று குறித்த பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு, மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். (க-246)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
2026.02.22 அன்று
யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற
40வது பட்டமளிப்பு விழாவில்
கல்வியியல் முதுமானி [M.Ed]
பட்டத்தை பெற்ற
செல்வி
மேரி யூப்றேசியா
ஞானப்பிரகாசம்
(B.A, PGDE)
அவர்களை மனதார வாழ்த்தி
நிற்கின்றோம்.
Best Wishes
குடும்பத்தினர்.
(CS 31292)A



## வாழ்வால் இயேசுவை அடையாளப்படுத்துவோம்

*"யோனா நினிவே நகர மக்களுக்கு அடையாளமாக இருந்தது போன்று மானிடமகனும் இந்தத் தலைமுறையினர்க்கு அடையாளமாக இருப்பார்". (லூக் 11:30)*

நாம் ஒரு இடத்தைச் சென்றடைய இடக்குறியீட்டை அடையாளமாகப் பயன்படுத்துகிறோம். ஒருவரை இனங்காண ஆளடையாளங்களைக் கேட்பதுண்டு. அதேபோன்று அக்காலத்தில் இயேசுவைப் புரிந்துகொள்ளவும், நம்பவும் மக்கள் சில அரிதான அடையாளங்களை எதிர்பார்த்தனர். கைதியாக நின்ற இயேசுவிடம் ஏரோது, புதுமை புரியும் அடையாளத்தை எதிர்பார்த்தான். யூதரில் சிலர் இயேசு சிலுவையிலிருந்து இறங்கிவந்து தம்மை இறைமகன் என்று அடையாளப்படுத்துவார் என்று எதிர்பார்த்தனர். ஆனால் அவர் சாவை வென்று உயிர்த்து தம்மை அடையாளப்படுத்தினார். கிறிஸ்தவர்கள் என்பதை நாம் எவ்வாறு அடையாளப்படுத்துகின்றோம்? மானிடவாழ்வு எப்போது வலுவிழந்து தேக்கமடைகிறதோ அப்போது வீறுகொண்டு உதவிடப் பாயும் உன்னத சகதியாக நாம் எழுவதே கிறிஸ்தவத்தின் அடையாளம். மக்களைப் பிரித்து உரிமைகள் மறுக்கப்படும் போது ஒருங்கிணையும் போராட்டமே இயேசுவின் அடையாளம். தீயவழிகளை விட்டு இரக்கச் செயல்களைத் தொடர்வதே தவக்காலத்தில் மனமாற்றத்தின் அடையாளம். எமது வாழ்வே இயேசுவின் அடையாளமாகட்டும். தமது பாடுகளின் அடையாளமாக நாம் உருமாற்றம் பெறுவதையே இயேசு எதிர்பார்க்கின்றார். செயலில் இறங்குவோம்.

**எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை**

**கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு**
**தபால் நிலைய வீதியில் அமைக்கப்பெற்ற கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்**

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் தபால் நிலைய வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.
கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :-25.02.2026 – 10.03.2026 வரை
(முற்பகல் 9.00 மணி தொடக்கம் பி.ப 02.00 மணி வரை அலுவலக நாட்களில் மட்டும்)
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :-11.03.2026 மு.ப 10.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 11.03.2026 மு.ப 10.30 மணி

| இல | கடை இலக்கம் | கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| | முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | கடை இல - 04 | 2,000.00 | 26,400.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 2 | கடை இல - 07 | 2,000.00 | 26,400.00 | 11,000.00 | **2,640,000.00** |
| 3 | கடை இல - 08 | 2,000.00 | 26,400.00 | 11,000.00 | **2,640,000.00** |

நிபந்தனைகள்:

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை தவிசாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தபால் நிலைய வீதியில் அமைந்துள்ள கடை இல....... என கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 10.03.2026 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
3. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளித்து விண்ணப்ப படிவத்தை பெற்றுக் கொள்ள முடியும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.
5. குறித்த கடையின் ஒப்பந்ததாரர்கள் எந்த வகையிலும் உப வாடகைக்கு வழங்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
6. நீண்ட கால குத்தகை கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கவும் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.
8. அதிகூடிய கேள்வித்தொகை கூறும் கேள்விதாரருக்கு சபையுடனான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும். தவறும் பட்சத்தில் இரண்டாவது கேள்விதாரருக்கு கடைக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும். ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்பு பணம் மீளளிக்கப் படமாட்டாது.
9. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஒரே தடவையில் கேள்வித் தொகையின் முழுத் தொகையையும் பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்த உடன் படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
10. கேள்வித் தொகை எந்த சந்தர்ப்பத்திலும் சபையால் மீளளிக்கப்பட மாட்டாது.
11. சபையின் அனுமதியின்றி எதுவித திருத்த வேலைகள், மாற்றங்கள், புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
12. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும். (ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் கடைகளின் வியாபாரத்திற்கு பொருத்தமற்ற வியாபாரங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது)
13. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடக்க தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பண...தொகைகள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
14. சபையின் தவிசாளரின் / செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எதுவித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாக தவிசாளர் / செயலாளருக்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
15. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தவிசாளர்,
கரைதுறைப்பற்று பிரதேச சபை,
முல்லைத்தீவு.
25.02.2026
(CR/47112) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 10 . 1986

மறைவு 22 . 02 . 2026

## பூபாலசிங்கம் நகுலேஸ்வரன்

**(உரிமையாளர் - நகுலன் கறாஜ், காளிகோவில் வீதி, சாவகச்சேரி)**

சாரதா வீதி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் நகுலேஸ்வரன் (உரிமையாளர் - நகுலன் கறாஜ், காளிகோவில் வீதி, சாவகச்சேரி) அவர்கள் கடந்த (22.02.2026) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் - பரிமளம் தம்பதியரின் அன்பு மகனும், தனுஷிகாவின் பாசமிகு கணவரும், புஸ்பலதா, புவனேஸ்வரி, கோகுலகிருஷ்ணன் (france), பிறேமதர்ஷினி (france) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவரூபன், பிரகலாதன், வினோதினி (france), வாகீசன் (france) ஆகியோரின் மைத்துனரும், சரணியா, டஸ்மியா, சுவேனிகா, சைலேந்திரன், சௌமியன், ஜெனிப்பிரியா, சோஃபியா, சஸ்வின் ஆகியோரின் மாமனாரும், வைசுவின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2026) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**சிவம் - 077 361 8519, ரூபன் - 077 156 1267**

(CR/47108) J-1

# கண்ணீர் காணிக்கை



தோற்றம் 18.09.1945 | மறைவு 23.02.2026


## அமரர் நடராஜா சிறீதரன்

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி
ராதிகா சசிதரன் அவர்களின்
அன்புத் தந்தையார் கடந்த
(23.02.2026) திங்கட்கிழமை
காலமானார். அன்னாரின்
பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரின்
ஆன்மாசாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

(CS/60843) J-1

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 26.01.2026 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அருணாசலம் கார்த்திகேசு

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியை
இன்று (25.02.2026) புதன்கிழமை
முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின்
இல்லத்தில் நடைபெற இருப்பதால்
அத்தருணம் தங்கள் குடும்பத்தினருடன்
வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து
நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.**

ஐயனார் வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

குடும்பத்தினர்
0774048956, 0776612025

# மரண அறிவித்தல்



## திருமதி பெனடிக்ற் மேரி யோசேப்பின்

**(புஸ்பம்)**

யாழ்ப்பாணம் 115, புனித பத்திரிசியார் வீதியை பிறப்பிடமாகவம் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பெனடிக்ற் மேரி யோசேப்பின் (புஸ்பம்) அவர்கள் கடந்த 23.02.2026 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கஸ்மிர் யோசப் அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்வரட்ணம் பொன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அல்பிரட் பெனடிக்ற் அவர்களின் பாசமிகு துணைவியும், செல்வரஜித் (லண்டன்), அருட்பணி சதிஸ்குமார் (யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க குரு, ஆசிரியர் - கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காமலிற்றா நிசாந்தினியின் (லண்டன்) அன்பு மாமியாரும், றிக்கேஸ் (லண்டன்), றியானா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஜோர்ச், புனிதம், றாஜன் ஆகியோரினதும், யோரட்ணம் (கனடா), யோகராசா (ஜேர்மனி), சறோ (திருகோணமலை), துரை (ஜேர்மனி), ஜெகா (சுவிஸ்லாந்து) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான மலர், பொன்ராசா, செல்வம், ராணி, பபி, றொபேட், விஜயபாலன், வர்ணா ஆகியோரினதும், பவா, ஜோகானந்தம், யசோதா, வசந்தி, இந்து ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (26.02.2026) வியாழக்கிழமை பி.ப [illegible] 3.00 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி [illegible] ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 31293)A

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



மலர்வு 26 . 10 . 1936

உதிர்வு 22 . 02 . 2026

## பொன்னுச்சாமி வள்ளிப்பிள்ளை

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி வள்ளிப்பிள்ளை அவர்கள் கடந்த (22.02.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுச்சாமி அவர்களின் அன்பு மனைவியும், சத்தியபாமா (பிரான்ஸ்), சத்தியநாதன் (கனடா), சத்தியசீலன் (பிரான்ஸ்), சத்தியபவான், சத்தியபிறேமா, சத்தியஜெயன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சின்னையா மற்றும் சிவராணி (கனடா), யூலியட் (பிரான்ஸ்), ரஜணி, சுகுமார், பார்மதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவநேசன், காலஞ்சென்ற சிவகரன் [illegible] றும் சிவயோகன், சிவபதன், சஞ்சீவ், லகீசன், தர்சிகா, திலக்சிகா, [illegible] லவன், நிலானி, அனைஸ், ஜெசிக்கா, சோமியா, சஞ்ஜிகா, [illegible] கோவிகா, காவ்யா, திவ்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், [illegible] கலைமகள், கோபனா, கீர்த்தனா, சோபனா, தனஞ்சேயன், றஜீவன், [illegible] விஷ்ணுகாந் ஆகியோரின் பேர்த்தியும், தயூரா, தயூரன், தயுமிதா, தயூரிகா, டியானா, டிலான், லனா, மிலேனா, மர்வின், மீரா, வேயோன்ருத்ரன், நிலன், ஆதிரா, நேத்ரா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**077 613 4438, 077 971 1208**

(CS/60845) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25.02.2026
புதன்கிழமை

# புதன் பொய்கை


நீ பிறரின் குணாதிசயங்களைக் கணிக்கத் துவங்கினால் அவர்பால் அன்பு செலுத்த நேரம் இருக்காது.

– அன்னை தெரேசா





# சாந்தன் நினைவாலயமும் பள்ளிப்படையும்

○கலாநிதி நா.செந்தூர்ச்செல்வன்

இலங்கை -இந்திய அரசியல் வரலாற்றில் பேசப்பட்ட ஒரு விடயம் ராஜீவ் காந்தி படுகொலை. பல அரசியல் திருப்புமுனைகள், குழப்பங்கள், பல நகர்வுகள் என்பவற்றில் சிக்கி விடைபுரியாமல் இருந்த அந்த நிகழ்வில் பேசப்பட்டவரும் அந்தச் சம்பவத்தின் சந்தேகநபராக இந்திய அரசால் கைதாகி நீண்ட வருடங்கள் சிறைவாசம் அனுபவித்து மிகத்துயரில் வாழ்ந்த ஈழத்துமகனும் இலக்கியவாதியுமான ம.தி.சாந்தனின் வாழ்க்கை வரலாறு பலரும் அறிந்த விடயமே.

அவரது இழப்பின் பின்பு, மரணச்சடங்குகள் அவரது குடும்பத்தினரால் யாழ்ப்பாணம், வடமராட்சிப் பகுதியில் அமைந்திருந்த மாவீரர் துயிலும் இல்லத்தின் பின்புறம் உள்ள இந்துமயானத்தில் நிகழ்த்தப்பட்டு, உடல் நல்லடக்கம் செய்யப்பட்டு, ம.தி.சாந்தன் விதைக்கப்பட்ட இடத்தில் துயில் ஆலயம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இது இன்று சிலராலும், அரசியல் உள்நோக்கம் கொண்டோராலும் குழப்பமான முறையில் பேசப்படும் ஒரு விடயமாக மாறியுள்ளது.

இந்து மதத்தைச் சார்ந்த ஒரு சிலர், 'இறந்தவரின் சமாதியில் அம்மனின் விக்கிரகம் வைக்கப்பட்டமையானது, எமது சமயத்திற்கு முரணானது' என்றொரு சர்ச்சையைக் கிளப்பியுள்ளனர். இந்த நிலையில் அவர்களுக்கு சில தெளிவூட்டல்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. சாந்தனது திருவுடல், ஒரு சித்தருக்குரிய சமாதிச் சடங்குகளுடன் நிறைவேற்றப்பட்டு விபூதியினாலேயே மூடப்பட்டுள்ளது. அத்துடன் அவரது உச்சியிலிருந்து செப்பிலான கம்பி ஒன்று மேல் பீடம் வரை கொண்டுவரப்பட்டு அவர் சிறையில் இருந்த காலம் முழுதும் வழிபட்ட 'செல்லி' அம்மனுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த முறைமையே இன்று இங்கே புதிதாக பலராலும் பார்க்கப்படுகிறது அல்லது ஏன் என்று கேள்வி எழுப்பப்படுகிறது.
ஆனால் பலரும் நினைப்பது போல இதுவொன்றும் புதிய நடைமுறையல்ல. இந்த முறை சங்ககால நடுகல் வழிபாட்டுடன் தொடர்புபட்டதென்பதை ஆராய்ச்சியாளர்கள் உறுதிசெய்துள்ளனர். இதனை 'பள்ளிப்படை' என்று சங்ககாலத்திலே அழைத்தனர்.

பொதுவாகவே பள்ளி என்றால் உறக்கம் /துயில் என்பர். அதாவது உடல் உறைந்துவிட்ட நிலை (மரணம்), நிரந்தர உறக்கம், படை உருவாக்கம் என இதற்குப் பொருள் கொள்ளலாம். பாடை என்பது இறந்த உடலை வைப்பதற்கான தளம். இப்போதும் கூட மரணவீடுகளில் 'பாடை' கட்டும் வழக்கமுண்டு. அவ்வாறு இறந்தவரின் உடலை அடக்கம் செய்வதற்கு எடுத்துச்செல்லும் தளம் அல்லது இறந்த உடலைப் பாதுகாக்கும் இடத்தை பாடை என்றனர். அது பின்னாளில் படை என்று மருவி, 'பள்ளிப்படை' என்று கூறலாயிற்று.


சங்ககால மரபிலே, போரிலே இறந்த மாவீரர் அல்லது மன்னர் முதலானவர்களின் உடலை இவ்வாறு அடக்கம் செய்த இடங்களிலோ அல்லது அவர்களைத் தகனம் செய்த சாம்பல் மீதோ கட்டப்பட்ட லிங்க வடிவங்கள் நடுகல்லாக வழிபடப்பட்டு வந்தன என்று பல ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அதுபோன்றே ராஜராஜ சோழன், அரிஞ்சயன்சோழன், பஞ்சவன் மாதேவி ஆகியோரின் பள்ளிப்படைகள் இன்றும் தமிழ்நாட்டிலே உள்ளன. இவர்கள் சிவனைத் தமது குலதெய்வமாக முழுமுதற் கடவுளாக வழிபட்ட காரணத்தினால் இவர்கள் அடக்கம் செய்யப்பட்ட சமாதியின் மேல் சிவலிங்கம் கட்டப்பட்டு ஆலயமாக உள்ளது. இதுபோன்றே, சேர, சோழ, பாண்டியர் காலங்களில் பள்ளிப்படைகள் இருந்தமை வரலாறுகளில் உள்ளது. அதைவிடுத்தால் ஈழத்திலே ம.தி. சாந்தனின் பள்ளிப்படையே முதன்[illegible] சரி ஏன் சாந்தனை[illegible] ஆகின்றது. [illegible] பள்ளிப்படை அவசியம்? அவர் இதுவரை தனது இளமைக் காலங்களை ஆதாரமற்ற குற்றத்துக்காக சிறையில் கழித்தது மட்டுமல்லாது, ஈழமக்களுக்காக தனது இளமையைத் தொலைத்து, தனது எதிர்கால வாழ்க்கையைத் தியாகம் செய்து ஒரு துறவியாகவே வாழ்ந்தார். ஈழப் போராட்ட வரலாற்றில் மிக நீண்டகாலம் 33வருடங்கள்-சிறைவாழ்க்கையிலே கழித்தவர் அவர். அது மட்டுமல்லாது ஒரு மக்கள் சார்ந்த எழுத்தாளனாகவும் இலக்கியவாதியாகவும், ஒரு ஆன்மிகவாதியாகவும் வாழ்ந்துள்ளார். அவ்வாறு மக்களுக்காக தியாகம் செய்த, ஈழமக்களின் மனங்களில் நிறைந்த ஒருவருக்கு அமைக்கப்பட்ட துயில் ஆலயம் என்பது எதிர்கால சந்ததிக்கு வரலாற்றாளனாக காட்டும் பள்ளிப்படையாக அமைவதில் குழப்பங்கள் தேவைதானா?

"அன்பே இல்வாழ்க்கையின் அடிப்படை, ஆடம்பரமல்ல; அதேபோல் தியாகமே வரலாற்றின் அடிப்படை!"

கொற்றவை என்பதும் அம்மன் என்பதும் ஒன்றுதானே. கொற்றவை ஆடிய கூத்தினின்று [illegible] எம் மாத்திரம்? செல்லியம்மனுக்கும் தனக்குமான உறவு பற்றியும் தனது ஆசைகள் பற்றியும் ம.தி.சாந்தனே கைப்பட எழுதிய எழுத்துகளும் உள்ளன. அவ்வாறிருக்கையில், சிவனும் சக்தியுமாக வாழும் ஒரு இறைமார்க்கத்தில் ம.தி. சாந்தனின் இஷ்டதெய்வமான செல்லியம்மன் எனும் இறைவியை அவரது பள்ளிப்படையில் அமர்த்தியிருப்பது குற்றமல்ல. இது ஒரு வரலாற்றுப் பதிவாகும், ஏனெனில் இதுவே ஈழத்தின் முதலாவது பள்ளிப்படையும் ஆகும்.

சோழர் [illegible] மற்றும் பாண்டியர்களால் தொடரப்பட்ட தமிழர் மரபு ஒன்றின் தொடர்ச்சித் தன்மையை ம.தி.சாந்தனின் பள்ளிப்படை மூலம் நாம் தொடரவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அதிகரிக்கும் ஆடம்பரத் திருமண நிகழ்வுகள்!

● ப. அருந்தவம்

'இரு மனங்கள் இணைவதே திருமணம்' என்ற காலம் போய் இரு குடும்பங்கள் சமூக அந்தஸ்தை வெளிக்காட்டுவதற்கான செயற்பாடே இன்றைய திருமணங்களாக மாறிவிட்டன. உறவுகள் சூழ அன்று நடந்த திருமணங்கள், இன்று விருந்தினரை வரவேற்பதற்குக் கூட தொழிலாளரைப் பயன்படுத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

### திருமணத்தின் முன்பே அத்தனை செலவா?

திருமண வைபவம் நடைபெறுவதற்கு முன்பே மணமக்கள் தனித்தனியாகப் படம் எடுத்துக்கொள்வது(Pre Wedding Shoot ), இதற்காகத் தனியாக ஆடைகள் வாங்குவது, புகைப்படம் எடுப்பதற்கும், வீடியோ எடுப்பதற்கும் இலட்சக்கணக்காகச் செலவு செய்வதும் மணமக்கள் ஒப்பனைச்செலவு மட்டுமல்லாமல், குடும்பமே ஒப்பனை செய்துகொள்வது எனத் திருமணச் செலவுகள் உச்சத்தைத் தொட்டுநிற்கின்றன. திருமண நிகழ்வின் பிற்பாடும், 'PostWedding Shoot' என்று அதற்குக்கூட பல்லாயிரக்கணக்கான காசுகள் கரியாகிறன. பத்து வருடத்தின் பின்னர் இவ்வளவு பணம் செலவு செய்து எடுத்த வீடியோவை யார் தான் பார்ப்பாரோ தெரியாது?

### இலட்சங்களைத் தொட்டுநிற்கும் முகூர்த்தப் புடவை

இலட்சம் ரூபாவுக்கு மேல் முகூர்த்தப் புடவை வாங்கினால்தான் கௌரவம் என்று ஒரு நிலைப்பாடு உண்டு. அடிக்கடி கட்டிக்கொள்ளமுடியாத முகூர்த்தப் புடவைக்குத் தேவையில்லாமல் இவ்வளவு பணம் செலவு செய்யவேண்டுமா? இது மட்டுமா மணமகள் ரவிக்கையில் கற்கள் பதிப்பது, ஆரி வேலைப்பாடுகள் செய்வது, திருமணத்தில் உறவினர்கள் ஒரே மாதிரியாக உடையணிவது என அடுக்கடுக்காகச் செலவு நீண்டு செல்கிறது.

### திருமணத்தில் உணவு விரயம்

திருமண நிகழ்வின் போது உடையலங்காரச் செலவை மிஞ்சும் வகையில் விருந்துச் செலவு ஏற்படுகிறது. திருமண நிகழ்வில் போசணைத் தேவை, உடல் ஆரோக்கிய நிலைமை என்பவற்றைக் கருத்திற்கொள்ளாது நாவிற்கான ருசி, மணம், பார்வைக்கு அழகு, அந்தஸ்தில் உயர்வு என்பவற்றைக் கருத்திற்கொண்டு உணவு பரிமாறப்படுகிறது. விழாவில் உணவு உண்பதனை விட விரயம் செய்வது அதிகமாகவும் காணப்படுகிறது. உணவு விரயம் ஒரு சமூகக்குற்றம் என்பதனை சம்பந்தப்பட்டவர்கள் அறிவார்களா?

### செல்வாக்கை வெளிப்படுத்தும் திருமண அழைப்பிதழ்

தற்போது பெரும்பாலான நடுத்தர வர்க்கக் குடும்பங்கள் இந்தியாவின் அம்பானி வீட்டுத் திருமணம் போலத் தங்கள் வீட்டுத் திருமணங்களையும் ஆடம்பரமாக நடத்த ஆசைப்படுகிறார்கள். கடனையாவது வாங்கித் தம் வீட்டுக் கல்யாணத்தை ஆடம்பரமாக நடத்தவேண்டும் எனும் ஆர்வம் பலரையும் ஆட்டிப்படைக்கிறது. திருமண அழைப்பிதழில் கூட அம்பானி மாதிரித் தங்கள் செல்வாக்கைக் காட்டவே பலரும் நினைக்கின்றார்கள். அம்பானி நூறு கோடி ரூபா செலவு செய்தார் என்றால் அது அவரின் சொத்து மதிப்பில் 0.028% என்றும் ஊடகங்கள் மூலம் நாம் அறிந்தோம் அல்லவா? ஆனால் எமது பிரதேச நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களது திருமண நிகழ்வு பக்கத்து வீட்டாரின் திருமணத்தைவிட ஆடம்பரமாக நிகழவேண்டும் என்பதனையே ஒரு ஆசையாகக் கொண்டுள்ளனர்.



### வட்டிக்கும் பணம் பெற்று திருமணமா?

வெறும் ஆடம்பரத்துக்காக மட்[illegible] வட்டிக்குக் கடன் வாங்கி கல்[illegible]விட்டு காலம் [illegible] முழுவதும் கடனை அடைப்பதற்கே

### இப்படியும் செய்யலாம்

படித்தவர்களில் சிலர் தங்களின் வீட்டுத் திருமணங்களை எளிமையான முறையில் செய்தால் அதைப் பார்க்கும் பலரும் இவ்வாறே நாமும் செய்யலாம் என்ற எண்ணம் உருவாக வாய்ப்புள்ளது. அதிகம் செலவு செய்து திருமணம் நடத்த ஆசைப்படுபவர்கள் அந்தப் பணத்தை தங்கள் பிள்ளைகளின் வருங்காலத் தேவைகளுக்குக் கொடுத்து உதவலாம். ஆடம்பரம் மிக்க திருமணத்துக்கு ஆகும் செலவில் ஒரு சுயதொழில் அல்லது வணிக நடவடிக்கை தொடங்க மூலதனமிடலாம். இவையே வாழ்க்கையை வளமாக்கும். அன்பே இல் வாழ்க்கையின் அடிப்படையாக இருக்கவேண்டுமே தவிர ஆடம்பரமல்ல என்பதனை எல்லோரும் சிந்திக்கவேண்டும்.

தங்கள் வாழ்க்கையைத் தொலைக்கும் நடுத்தர வர்க்கத்தினரில் பலர் எம்மத்தியில் வாழ்கின்றனர். இவர்கள் கடனைத் திருப்பிக் கட்டமுடியாமல் தவிக்கும்போது முன்பு நடந்த ஆடம்பர திருமணத்தை நினைத்துப் பார்த்தால் மனம் இனிக்குமா என்ன? இன்று நடுத்தர வர்க்கத்தாரின் பொருளாதாரத்தை சிதைக்கக்கூடிய வகையில் ஆடம்பரத் திருமணங்கள் மாறியுள்ளன.

### உசுப்பேத்தும் உறவுகள்

"வாழ்க்கையில் திருமணம் ஒருமுறைதான் வரும் அதை மிகவும் சிறப்பாக நடத்தவேண்டும்" என்று ஊரே பேசும் வகையில் உனது வீட்டுத் திருமணம் நடக்கவேண்டும் என்றெல்லாம் உசுப்பேத்தி விடுபவர்கள் பேச்சைக் கவனிக்காமல் விடுவது சாலச் சிறந்ததாகும்.

கொரோனாப் பெருந்தொற்றுக்காலத்தில் பல திருமணங்கள் எளிமையாகவும், குறைந்த நபர்களுடனும், குறைந்த பொருள் செலவிலும் நடந்ததை யாவரும் அறிவோம். இதுபோன்று இன்னும் நாம் ஏன் செய்யக்கூடாது? மாற்றம் ஒரு முதலில் வரவேண்டியது எம்முடைய மனதில் அல்லவா? ஆகவே தேவையற்ற ஆடம்பரங்களைத் தவிர்த்துத் திருமண பந்தத்தில் இணையப்போகும் இரு உள்ளங்கள் இன்பமாகவும் நிம்மதியாகவும் அனுசரணையுடனும் இனிய இல்லறத்தை தொடங்கவேண்டும்.

*"ஆடம்பரத்தைத் தவிர்ப்போம்...*
*ஆனந்தமாய் வாழ்வோம்!!"*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரியத்தின் வேர்களும் நவீனத்தின் சிறகுகளும்

## அமிர்தமும் நஞ்சும்



கில்டா தேவராசா

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' - இந்த முதுமொழி நம் காலத்து விவசாயத்துக்கு மிகச்சரியாகப் பொருந்துகிறது. மனிதன் இயற்கையோடு கைகோர்த்து நடந்த வரை, அவன் உடல் நோயற்று இருந்தது; அவன் மனம் அமைதியுற்று இருந்தது. இன்று தொழில்நுட்பத்தின் பாய்ச்சலில் நாம் எவ்வளவோ தூரம் முன்னேறிவிட்டாலும், அந்தப் பழைய ஏர்முனையின் ஈர மண் வாசத்தையும், கூட்டுழைப்பின் இனிமையையும் இயந்திரங்களால் ஈடு செய்ய முடிவதில்லை.

**மண்ணோடு பேசிய மனிதர்கள்**

பாரம்பரிய விவசாயம் என்பது வெறும் தொழில் அல்ல; அது ஒரு கலை, ஒரு பண்பாடு. உழவன் நிலத்தை வெறும் மண்ணாகப் பார்க்கவில்லை, தாயாகப் பார்த்தான்.

*'உழவர் நிலத்தை உழுவார்!*
*உழுத நிலத்தில் விதைப்பார்!*
*பழுதில்லாமல் நீரைப்பாய்ச்சி பயிரை நாளும் வளர்ப்பார்!*

*நிலத்தில் களையை எடுப்பார்!*
*நெல்லுக்கெருவை கொடுப்பார்!*
*தலையை தாழ்த்தி வீழ்ந்த நெல்லின் தங்கக்கதிரை அறுப்பார்!*
*உளத்தில் மகிழ்ச்சி பொங்கி உண்டு வழங்கி களிப்பார்!'*

ஏர் பூட்டி உழுதலும், நாற்று நடும்போது பாடிய நாட்டார் பாடல்களும், அறுவடையின் போது பொங்கிய அந்த ஒற்றுமையும் இன்று மெல்ல மெல்ல மங்கிக் கொண்டிருக்கின்றன. அன்று விவசாயம் என்பது மனக்கவலைகளைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு களமாக இருந்தது. உழைப்பின் களைப்புத் தெரியாமல் இருக்கப் பாடிய பாடல்களும், வரப்பில் அமர்ந்து உண்ட கஞ்சியும் கொடுத்த ஆரோக்கியம் இன்று 'ஏசி' அறைகளில் அமர்ந்து உண்ணும் உணவில் கிடைப்பதில்லை.

**நவீனத்தின் வருகையும் நெருக்கடியும்**

காலமாற்றத்தின் விளைவாக, இன்று இயந்திர விவசாயம் தவிர்க்கமுடியாததாகிவிட்டது. ஆட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு, நேர நெருக்கடி போன்ற காரணங்களால் 'ட்ரோன்' மூலம் விதைப்பதும், பிரமாண்ட இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்வதும் இயல்பாகிவிட்டன. வெளிநாடுகளில் மண்ணே இல்லாமல் கீரை வளர்க்கும் 'ஹைட்ரோபோனிக்ஸ்' தொழில்நுட்பம் வரை உலகம் வளர்ந்து விட்டது.

விவசாயிகளிடம் கேட்டால், "நவீனம் சுலபமானது, இரண்டு நாள்களில் வேலையை முடித்துவிடலாம்; ஆனால் பழைய விவசாயத்தில் இருந்த அந்த ஆத்மார்த்தமான திருப்தி இன்று இல்லை" என்கிறார்கள். இன்றைய இளைஞர்கள் உடல் உழைப்பை விடக் கணினித் திரையையும், இயந்திரங்களையுமே அதிகம் நம்புகிறார்கள்.

**தீர்வு எங்கே இருக்கிறது?**

நவீன தொழில்நுட்பம் நமக்கு வேகம் தருகிறது. ஆனால் பாரம்பரியம் நமக்கு வாழ்வாதாரத்தையும் ஆரோக்கியத்தையும் தருகிறது. நாம் தொழில்நுட்பத்தை எதிர்க்கவேண்டியதில்லை; ஆனால், அதை இயற்கைக்குத் தீங்கு விளைவிக்காத வகையில் பயன்படுத்தவேண்டும். மண்ணின் வளத்தைக் கெடுக்காத இயந்திரங்கள், இரசாயனம் கலக்காத நவீன உரங்கள் எனப் பாரம்பரியத்தின் அடிப்படையைக் குலைக்காத நவீனத்துவமே நமக்குத் தேவை.

இயற்கைக்கு எப்போதும் மதிப்பும் விலையும் அதிகம். இயந்திரங்கள் வேலையை எளிதாக்கட்டும், ஆனால் அந்த உழைப்பின் பின்னால் இருக்கும் இயற்கையோடு பின்னிப்பிணைந்த வாழ்வியல் முறை மாறக்கூடாது. அப்போதுதான், ஆரோக்கியமான உணவும் வளமான சந்ததியும் நமக்குப் பரிசாகும். பாரம்பரியத்தின் வேர்களில் நின்றுகொண்டு நவீனத்தின் சிறகுகளை விரிப்பதே காலத்தின் கட்டாயம்.

# மழைக்கால மேகம்—நாவல் ஒரு வாசக அனுபவம்

ஆனையூர்க்கவிராயர்

நவீன புனைகதை இலக்கியங்களின் ஒரு பெரும் கூறான நாவல் இலக்கியம் அதன் படைப்பாளியின் கனதியான இலக்கிய ஈடுபாட்டினையும் படைப்பியல் யுக்திகளையும் மானிட சமூகத்தினை உயரிய திசைவழியில் அழைத்துச் செல்ல விளையும் தன்விருப்பார்வத்தையும் உள்ளீடாக உணர்த்திச் செல்லும் இயல்பினதாகும். அத்தகைய ஒரு இலட்சியப் பற்றுறுதி மிக்க ஒரு படைப்பாளியின் இலகுவான தாய்மொழியின் மென்மையான உரை நடைப் போக்கின் குறியீடாக 'மழைக்கால மேகம்' நாவல் முகைவிரித்துள்ளது. அக்கினிக் கீற்றுகளாக அழிவுகளை ஒரு தேசிய இனத்துக்குப் பரிசளித்த போரின் அவலங்களைப் போரின் வன்தழுவலில் நைந்துபோன இதயங்களின் தாற்பரியங்களைப் போர்ச்சூழலுக்கு வாசகர்களை பின்நகர்த்திச் சென்று துன்ப அனுபவங்களை நிஜத்தில் மிதப்பது போல எடுத்துரைக்கும் கதைப்பாங்கு நாவலுக்கு வலுச்சேர்க்கின்றது.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உள்ளக மாணவ ஊடாடல்கள், நிர்வாக இயங்குமுறைகள், குறிப்பாக பாடசாலைகளினுடனான சமூக ஒருங்கிணைப்பு அணுகுமுறைமைகள் தொடர்பான கதைமாந்தர்களின் யதார்த்தத்தினின்றும் எள்ளளவும் குறைவுபடாத உரையாடல்கள் என்பன ஒரு எழுத்தாளராக மட்டுமன்றி அப்படைப்பாளியின் முன் அனுபவப் பகிர்வு போலவும் காண்பியம் செய்கின்றது. பாத்திரங்களின் வார்ப்பு தொடர்ந்து எதிர்பார்ப்புகளுடன் ஒத்துழைக்கும் சாதகத்தன்மை மிக்கதாகவே நகர்த்திச் செல்லப்பட்டுள்ளமை சற்று மிகையாகத் தோன்றுகின்றது. ஆயினும் ஆசிரிய வாண்மை, சமூகக் கட்டமைப்புத் தொடர்பான விடயங்களில் அவரது அதீத எதிர்பார்ப்புகள் அவரை உந்தித் தள்ளியிருக்கக்கூடும். எண்ணங்களின் அறுவடையாக கற்பனைச் சித்திரங்களை எழுத்துருவாக்கம் செய்யும் ஒரு எழுத்தாளரின் இதயதாகம் கதைமாந்தர்களை நகர்த்திச் செல்லத் தூண்டுவதும் தவிர்க்கமுடியாதது. 'பாறணைக்குச் சாப்பிட வருவேன்' என்று கூறிய அதே இளம்பெண் அவ்வீட்டிற்கு உயிரிழந்த உடலமாகக் கொண்டுவரப்பட்டதான சித்திரிப்பு கல் நெஞ்சையும் கரையவைக்கும். இது போரின் கொடுமைக்கு இரத்த வரிகளாக வெளிப்படும் சான்று. அந்தக் கணத்து நிகழ்வுகளோடு கடந்தகால சம்பவக் கோர்வைகளை முன்னிறுத்தி ஒப்பீட்டுத் தோரணையில் வாசக நெஞ்சங்களில் படரவிடும் பாங்கு வாசகர்களைக் கதைக்களத்துடன் நெருக்கமாகப் பிணைக்கும் ஒரு இலக்கிய யுத்தி எனக் கருதமுடியும்.

பொதுவாக தனது கதைமாந்தர்களை ஒரு மேல்நிலை மனிதர்களாக இனங்காட்டும் விதம், மனித மனங்களை இலகுவாக அரவணைத்துக் கெடுக்கும் கீழ்மையான எண்ணவோட்டங்களைப் பெரிதும் மறுதலிக்கும் அவரது சிந்தனையின் மிகவும் கூர்மையடைந்த பக்குவ நிலையைப் புலப்படுத்துகின்றது. தமிழர் விருந்தோம்பல், ஆபத்தில் தேடிவருவோர்க்கு அபயமளிக்கும் இரக்கசிந்தனை, நெறிமுறைகளால் வழிநடத்தப்படும் குடும்பக் கட்டமைப்பு, உடன்பிறந்தோர், பெற்றோர் ஆகியோருக்கிடையிலான மதிப்பு, மரியாதை, பாசப் பிணைப்பு, தியாகத்தன்மை முதலியன கதை நெடுகிலும் புடம் போட்டுக் காண்பியம் செய்யப்பட்டமை ஒரு சமூகச் சீர்திருத்தத்திற்கு உந்துதிறனாக அமைகின்றது. ஒரு மனிதனின் சுய இயல்திறன் என்பது ஆதரவளிப்போரின் அன்பினாலும் பாரபட்சமற்ற பேருதவியாலும் மேலும் விருத்தியடையும் என்பதற்கு சில துணைப் பாத்திரங்கள் சான்றாதாரமாக அமைகின்றன. நெறி பிறழ்வை நோக்கிச் ஈர்த்துச்செல்லப்பட்ட மாணவி புத்திசாதுரியமாகத் காப்பாற்றப்பட்டு, உரிய உளவியல் ஆலோசனைகள் விழிப்புணர்வூட்டல்களின் பின் கல்வியை இலகுவாகத் தொடர்ந்து கல்வித்துறையில் சாதிக்கமுனைவது நடைமுறைச் சாத்தியமா? என எண்ணத் தோன்றினாலும் சாதனைப் பெண்ணாக நிலைநிறுத்தப்படும் இக்கதையின் கதாநாயகி தமிழரசி ஆசிரியையின் உயரிய செயற்றிறன் இதனை மெய்ப்பிக்கின்றது.

பழம் நழுவிப் பாலில் வீழ்ந்தது போல, அமைதியான அன்பின் ஊடுருவலில் ஒன்றித்த இரு இதயங்களான ரகுராமனும் தமிழரசியும் இருவருக்கும் இடையே இருந்த இடைவெளி இயல்பூக்கமாக விடுபட காலம் அவர்களை இல்லற வாழ்வில் இணைத்து வாழ்க்கைப் பாதையில் மட்டுமன்றிச் சமூகத்தை மேல் நோக்கி நகர்த்திச் செல்லும் ஒரு இலட்சிய வண்டியின் இரு சக்கரங்களாக இணைத்து விடுகின்றது. இந்த இலட்சிய தம்பதியரைத் தூரநின்று அவதானித்த வாசகர்களை தமிழரசியின் கொடிய நோய், ரகுராமனின் தவிப்பு, தமிழரசியின் நோயின் ஆளுமையில் முடிவை நோக்கிய எண்ணக்குமுறல் என்பன உள்ளே ஈர்த்துச் செல்கின்றன. முடிவில் கடவுள் கைகொடுத்துக் காப்பாற்றியது போன்ற காண்பியம் எழுத்தாளரின் நல்லோரை வாழவைக்கும் வல்லாண்மை உணர்வை வெளிப்படுத்துகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்தமிழால் தேசிய கீதம் தந்த முதுதமிழ் புலவர்

■ தமிழன்பன் - வ. குலத்துங்கன்



அடிமைப்பட்டுக் கிடந்த இலங்கையை விடுவித்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளப் போராடியவர்கள் உடலாலும், மொழியாலும், உணர்வாலும் அளப்பெரிய பங்களிப்பினை வழங்கியிருந்த நிலையில் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டபோது அதனைக் கொண்டாட நோக்கம் கொண்ட இளைஞர்கள் 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி சுதந்திரதின வைபவத்தை ஒழுங்குசெய்தனர். அன்றைய வைபவத்தில் பிரதமர் டி.எஸ். சேனநாயக்க சிங்கக் கொடியினை ஏற்றி வைத்தபோதும் எம்மை அதுவரை ஆண்டுகொண்டிருந்த ஐக்கிய ராஜ்யத்தின் 'God Save the King' எனும் தேசிய கீதமே அன்றைய நிகழ்வில் தேசிய கீதமாக இசைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இலங்கைக்கான தேசிய கீதத்தின் தேவை அவசரமாக உணரப்பட்டதோடு அக்காலத்தில் தேசிய சுதந்திரப் போராட்டங்களில் பாடப்பட்ட தேசப்பற்றினைத் தூண்டும் பாடல்களிலிருந்து பொருத்தமான பாடல் ஒன்றினைத் தேசிய கீதமாக தெரிவுசெய்ய முடிவெடுக்கப்பட்டது. அந்தக்காலத்தில் பிரபலமாக இருந்த 'நமோ நமோ மாதா' எனும் ஆனந்த சமரக்கோனின் பாடல் தேசிய கீதமாகத் தெரிவுசெய்யப்பட்டது. இதன்போது தமிழ்மொழியில் தேசிய கீதத்தின் தேவை உணரப்பட்டபோது சிங்களப் பாடலுக்கு இணையான தமிழ்த் தேசிய கீதத்தினை ஆக்கித் தந்தவரே நமது முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி. இவர் தற்போது சங்கானைப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள வட்டுக்கோட்டை மேற்கு கண்ணகை அம்மன் கோவிலடியில் வசித்த பெரும் புலவர் என்பது தற்காலத்தில் உள்ள பலர் அறிந்திருக்க சாத்தியமில்லை.

உபாத்தியாயர் முருகுப்பிள்ளை தங்கம்மை தம்பதியருக்கு ஏழாவது புதல்வராக 1896ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி பிறந்த இவர் இளமைக்கல்வியை தனது பிறப்பிடமான வட்டுக்கோட்டையிலும், உயர் கல்வியை தெல்லிப்பழை ஆசிரியர் பயிற்சிப் பாடசாலையிலும் கற்றுத் தேர்ந்து 1914ஆம் ஆண்டில் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆனார். பின்னர் பண்டத்தரிப்பு, மண்டைதீவு, ஆனைக்கோட்டை ஆகிய ஊர்களின் பாடசாலைகளில் கடமையாற்றி 1918 இல் கொழும்பு ஷாஹிராக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக நியமனம் பெற்று தலைமைத் தமிழ்ப் பண்டிதராக பதவி உயர்வு பெற்று இருபத்தி எட்டு ஆண்டுகளாக அங்கு தமிழ்ப் பணியில் தன்னைப் பூரணமாக ஈடுபடுத்தினார். இக்காலப் பகுதியில் அளுத்கம முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு இவர் அதிபராக தேர்வு செய்யப்பட்டபோது அந்தப்பதவியை ஏற்றுக்கொள்வதா அல்லது தற்போதைய ஆசிரியப் பணியைத் தொடர்வதா எனும் குழப்பம் புலவருக்கு ஏற்பட்டது. இதற்கான தெளிவினை இவரது உற்ற நண்பரான சுவாமி விபுலானந்தரிடம் கலந்து தெளிவுபெற்று தனது ஆசிரியப் பணியைத் தொடர முடிவுசெய்தார். இவர்கள் இருவரும் கொழும்பில் இயங்கிய விவேகானந்தர் சபை மூலமாக அறிமுகமாகி உற்ற நண்பர்களாக மாறினார்கள் என்பது அவர்களுக்கிடையிலான கடிதத் தொடர்புகளில் காணக் கிடைக்கின்றது. 1940ஆம் ஆண்டில் சுவாமி விபுலானந்தர் நல்லதம்பி புலவருக்கு எழுதிய கடிதத்தில் 'மனதுக்கினிய பெருங்குணத்து நல்லதம்பி பாவலன்' எனப் புலவரை விளித்து எழுதியமை இதற்குச் சான்றாகும்.

இந்நிலையில் அந்நாளில் புலவருக்கு இருந்த அரசியல் ஈடுபாடு காரணமாக தனது ஊரார் கே.கனகரத்தினத்தை நாடாளுமன்றத் தேர்தலில் வெல்வதற்கு தனது பேச்சாற்றல் எழுத்தாற்றல் மூலம் பேருதவி புரிந்தார். இதனால் வெற்றிபெற்ற கே.கனகரத் தினம் பின்னாளில் பதில் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார். இவரே புலவரின் தமிழ்த் தேசிய கீதத்தினை 1951இல் ஜூன் 15இல் உள்நாட்டு அலுவலக அமைச்சர் சேர் ஒலிவர் குணத்திலக மூலமாக அமைச்சரவையில் சமர்ப்பித்து "நாமோ நமோ மாதா" எனும் சிங்கள மொழிக்கு நிகரான தமிழ்த் தேசிய கீதமாக அங்கீகரிக்க வழிசெய்தார். 1952 மார்ச் 12இல் இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு சேர் ஒலிவர் குணத்திலக மூலமாக பத்திரிகை அறிக்கை மூலம் வெளியிடப்பட்டது.

1949 பெப்ரவரி நான்காம் நாள், டொறிங்டன் சதுக்கத்தில் சுதந்திர ஞாபகார்த்த கட்டடம் அமைக்கும் நிகழ்வில் சிங்களத்திலும் தமிழிலும் தேசிய கீதங்கள் முதன்முதலாக பாடப்பட்டுள்ளன. அன்று பிற்பகல் 4 மணிக்கு பிரதம மந்திரி நிகழ்வுக்கு வருகைதந்தபோது 'நமோ நமோ தாயே' என்று தொடங்கும் புலவரின் பாடல் இசைக்கப்பட்டு பி.ப 5.15 மணிக்கு பயிற்சிப்படை அணிவகுப்பு முடிந்தவுடன் 'நமோ நமோ மாதா' எனும் ஆனந்த சமரக்கோனின் கீதம் சிங்கள மொழியிலும் பாடப்பட்டது. தொடர்ந்து 1950 இல் நடைபெற்ற சுதந்திரதின நிகழ்வு காலையில் காலி முகத்திடலிலும் மாலை நிகழ்வு ஹவ்லொக் நகர் குதிரை பந்தய திடலிலும் நடந்தது. இதன்போது மாலைநேர நிகழ்வில் ஆரம்பத்தில் தமிழ்மொழித் தேசிய கீதமும் முடிவில் சிங்கள மொழித் தேசிய கீதமும் இசைக்கப்பட்டன. இவ்வாறே 1950ஆம் ஆண்டில் சுதந்திரத்தை கௌரவிக்கும் முகமாக இலங்கை அரசால் நாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்ட மரதன் அஞ்சல் ஓட்டப் போட்டியும் அதற்கு இணையாக சிங்கள-தமிழ் கவிஞர்களிடையே கவிதை ஆக்கல் போட்டியும் நடத்தப்பட்டது. இதில் தமிழ் மொழி மூலம் 58 பேரளவில் கலந்து கொண்ட போதும் 'மணித்தாய் நாடும் மரதன் ஓட்டமும்' எனும் நூற்று எட்டு பாடல்தொகுப்பைக் கொண்ட கவிதை முதுதமிழ்ப் புலவரான நல்லத்தம்பிப் புலவரால் சமர்ப்பிக்கப்பட்டு அவரே முதலிடமும் பெற்றுக்கொண்டார். இதற்காக அக்காலத்தில் நிதி அமைச்சராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன விடமிருந்து 29.4.1950 அன்று ஆயிரம் ரூபா முதற்பரிசினைப் பெற்றுக்கொண்டதுடன் இவருக்கான கௌரவிப்பு நிகழ்வு ஒன்றும் ஷாஹிராக் கல்லூரியில் நடத்தப்பட்டுள்ளது.

1946இல் ஷாஹிராக் கல்லூரியில் இருந்து விடை பெற்று இலங்கை பல்கலைக்கழகத்தில் நான்கு வருடங்கள் விரிவுரையாளராக பணிபுரிந்தார். 1950இல் அங்கிருந்து ஓய்வுபெற்று மீண்டும் யாழ்ப்பாணத்தில் தனது பிறப்பிடத்தில் குடும்பத்தாருடன் வசித்துவந்த காலத்தில் 1951ஆம் ஆண்டில் 29.4.1951 தொடக்கம் 1.5.1951 வரை மூன்று நாள்கள் யாழ். பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற 'நான்காம் தமிழ் விழா' எனும் ஆய்வுநிகழ்வில் 'கண்ணீர் பெருக்கிய கலித்தொகை' எனும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தினார்.

அன்றிலிருந்து சில தினங்களில் திடீர் சுகவீனமுற்ற புலவர், 8.5.1951 அன்று மாரடைப்பு ஏற்பட்டு மானிப்பாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, தனது 55ஆவது வயதில் அவரது பூவுலக வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்து இறைவனிடம் சேர்ந்தார்.

இவர் இயற்றிய பாடல்கள், கட்டுரைகள் என்பன எண்ணிலடங்காதவை. அவற்றுள் கிடைத்தவற்றையும் கிடைத்தற்கரியனவாய் இருந்தவற்றையும் பெருமுயற்சியில் ஒன்றுசேர்த்து வட்டுக்கோட்டை இளைஞர் மன்றத்தின் பெருமுயற்சியால் 'இளைஞர் விருந்து' எனும் கவிதைத்தொகுப்பு நூலாக்கம் செய்து வெளியிடப்பட்டது. மேலும் இவரது நாடகங்களை வட்டுக்கோட்டை நல்லதம்பி நாடக சபா மூலமாக மேடையேற்றி மகிழ்ந்தனர். இவரின் கடல் கடந்த தமிழ்ப் புலமைக்கு அங்கீகாரமாக 1940ஆம் ஆண்டில் தமிழ் நாடு திருநெல்வேலி தமிழ்ச் சங்கத்தினரால் 'முதுதமிழ்ப்புலவர்' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இத்தகு பெருமைமிகு முதுதமிழ் புலவரின் நற்புகழை மீண்டும் யாழ். மண்ணில் பேசும் முகமாக வட்டுக்கோட்டை மேற்கில் அமைந்துள்ள கண்ணகை அம்மன் கோவிலடியில் ஞாபகார்த்த மணி மண்டபமொன்று அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகள் மீதான தடை; நீக்கக்கோரிய வழக்கு தள்ளுபடி

சென்னை, பெப். 25

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதா தடையை நீக்குமாறு, சென்னை உ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப வழக்கு நேற்றுத் தள்ளுபடி செய்யப் டுள்ளது.

இந்தியாவில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்க வேண்டும் என்று வலியு றுத்தி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வைகோ வழக்குத் தொடர்ந்திருந்தார். சென்னை உயர் நீதி மன்றத்தில் கடந்த 2014ஆம் ஆண்டி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு. வருடங்களாக விசாரிக்கப்படாமல் இ தது.

இதையடுத்து இந்த வழக்கு நேற்று விசா ரணைக்காக எடுக்கப்பட்ட நிலையி லேயே, அந்த வழக்கு தள்ளுபடி செய்யப் பட்து. விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய மத்திய அரசாங்கம் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை பரிசீ லித்து வருகின்றது. ஆதலால், 2014ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக வழக்கு நடத்த சட்டத்தில் இடமில்லை என்று தெரிவித்தே வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்திய மத்திய அர சாங்கம் கடந்த 1991ஆம் ஆண்டு விடுத லைப் புலிகள் அமைப்பை தடைப் பட்டி யலில் சேர்த்தது. அன்றுமுதல் இன்று வரை புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கிளி. மாவட்டச் செயல த்துக்கு புதிய பிரதம பொறியி லாளர்



கிளிநொச்சி, பெப். 25

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தி புதிய பிரதம பொறியியலாளராக, எந் கனகசிங்கம் கருணாநிதி நேற்று தினம் தனது கடமைகளைப் பொறுப் றுக்கொண்டார்.

இவர் கிளிநொச்சி மாவட்ட நீர்ப் பாசன திணைக்களத்தின் நீர்ப்பாசனப் பொற யலாளராகக் கடமையாற்றி பின்ன பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகக் மையாற்றியிருந்தார். நீர்வள முகாமை துவம், நீர்ப்பாசனத் திட்டங்களின் பாடு மற்றும் பராமரிப்புப் பணிகள், மற்றும் நடுத்தர அளவிலா நீர்த்தேக்கங்களின் புனரமைப்பு நடவ கைகள் ஆகிய துறைகளில் விரிவா அனுபவம் கொண்டவர். இவர் தன பணிக்காலத்தில், பல கிராமப்புற நீர்ப சனத் திட்டங்களை வெற்றிகரமாக ஒ கிணைத்து விவசாய உற்பத்தி வளர்ச சிக்கு முழுமையான பங்களிப்பை வ கினார் என்று மாவட்டச் செயலகத்தி தெரிவித்துள்ளனர். (க-



# டித்வா புயலில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குக் காசோலை

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில், டித் புயலால் பாதிக்கப்பட்ட 435 குடும்பங் கை சேர்ந்த 701 மாணவர்களுக்கு நேற் காசோலை வழங்கப்பட்டது.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளி பிரஜாசக்தித் தலைவர்கள் 43 பேருக்கு மனங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்தி கரன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் எ முரளிதரன், கிளிநொச்சி மாவட்ட அபிவி திக்குழுத் தலைவர் மருங்கன் மோகன் றும் கரைச்சிப் பிரதேச செயலர் முகுந் பிரதேசசபை உறுப்பினர்கள், பொது அ புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கல கொண்டனர். (க-

# எப்ஸ்டீனுடன் தொடர்பால்; கைதானார் மண்டேல்சன்

அமெரிக்காவுக்கான முன்னாள் பிரிட்டன் தூதுவர் பீட்டர் மண்டேல்சன் லண்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பொதுப் பதவியில் இருந்தபோது தவறான நடத்தை மற்றும் தவறான நடத்தைக்கான சந்தேகத்தின் பேரில் அவர் கைதுசெய்யப் பட்டுள்ளார் என்று பிரிட்டன் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. சர்ச்சைக்குரிய நிதியாளரும் பாலியல் குற்றவாளியுமான ஜெப்ரி எப்ஸ் டீனுடன் மண்டேல்சனுக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது என்று வெளியான தக வல் களுக்குப் பின்னர், கடந்த செப்ரெம்பர் மாதம் மண்டேல்சன் தூதர் பதவியில் இருந்து நீக்கப்பட்டி ருந்தார். (எ-இ)


## பாராட்டி வாழ்த்துகிறோம்





எம் இனிய உறவுகளே.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40வது பட்டமளிப்பு விழாவில்
யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் அங்கத்தவர்களான
**முருகமூர்த்தி கீர்த்திகன்**
அவர்கள் சிறப்புக் கலைமானியாகவும்
**சிவராசா தர்ஜன்**
அவர்கள் பொதுக்கலைமானியாகவும்

பட்டதாரிகளாக மகுடம் சூடி எமக்கு பெருமை சேர்த்துள்ளார்கள் இவர்களுக்கு எமது பாராட்டுக் களையும் தெரிவித்து மகிழ்வதோடு வாழ்த்துக்களையும் எமது கந்தசாமி கல்விநிதியத்திற்கு திறக்க அறிவுக்கண் கண்ணிழந்த வர்களின் நன்கொடைகளை வாரிவழங்கி வருகின்ற வள்ளல்களுக்கு எமது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்து மகிழ்கிறோம் 50 வருடங்களாக பார்வையற்றவர்களுக்காக பணியாற்றி வரும் ஆக நீள்கிறது உறவுகளே எமது நிறுவனத்தின் பட்டதாரிப் பட்டியல் இன்று 107 தொடர்ந்தும் ஊனக்கண்ணிழந்தவர்களின் அறிவுக் கண் திறக்கவும் எமது சமூகப்பணி சிறக்கவும் உங்களது அன்பளிப்புக்களை தொடர்ந்தும் வாரி வழங்குமாறு தங்களைத் தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

(CS/60852) J-1


## பெறுகை அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி

## சமைத்த மற்றும் உலர் உணவுகள் வழங்கலுக்கான பெறுகைகள் - 2026/27

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கான உலர் உணவுகள் மற்றும் சமைத்த உணவுகள் வழங்குவதற்கு இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.
2. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித் தனியாக மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
   அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ஆ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A 09 வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285932/ 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, A 09 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 25.02.2026 ஆந் திகதி முதல் 17.03.2026 ஆந் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. 11.03.2026 ஆந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறைமுறைகள் தொடர்பான முன் கூட்டம் (pre-bid meeting) எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.
8. கேள்விகள் யாவும் 17.03.2026 ஆந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியதாக தலைவர் , கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின், கண்டி வீதி, கிளிநொச்சி முகவரியில் நேரடியாகவோ் அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் நிதிக்கிளையில் காணப்படும் பெறுகைப் பெட்டியினுள் இடலாம். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் 17.03.2026 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) ஒவ்வொரு பெறுகைக்கும் தனித் தனியாக செலுத்தப்படல் வேண்டும்.
10. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| இல | விபரங்கள் | குறியீட்டு இலக்கம் | பெறுகைப் பிணைத் தொகை | பெறுகைப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | மீளளிக்கப்படாத வைப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | ஆதார வைத்தியசாலை முழங்காவில் | NP/04/45/RDHS-KOC/DF/BH-MUL/ 2026/27/01 | ரூபா.45,000.00 | 14.07.2026 | ரூபா.3000.00 |
| 02 | பிரதேச வைத்தியசாலை அக்கராயன்குளம் | NP/04/45/RDHS-KOC/CM/AKK/ 2026/27/02 | ரூபா.40,000.00 | 14.07.2026 | ரூபா.3000.00 |
| 03 | பிரதேச வைத்தியசாலை பூநகரி. | NP/04/45/RDHS-KOC/CM/POO/ 2026/27/03 | ரூபா.40,000.00 | 14.07.2026 | ரூபா.3000.00 |
| 04 | பிரதேச வைத்தியசாலை தர்மபுரம் | NP/04/45/RDHS-KOC/CM/THAR/ 2026/27/04 | ரூபா.60,000.00 | 14.07.2026 | ரூபா.3000.00 |
| 05 | பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம். | NP/04/45/RDHS-KOC/CM/URUT/ 2026/27/05 | ரூபா.15,000.00 | 14.07.2026 | ரூபா.2500.00 |
| 06 | பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி | NP/04/45/RDHS-KOC/CM/VADD/ 2026/27/06 | ரூபா.15,000.00 | 14.07.2026 | ரூபா.2500.00 |
| 07 | பிரதேச வைத்தியசாலை வேரவில். | NP/04/45/RDHS-KOC/CM/VER/ 2026/27/07 | ரூபா.25,000.00 | 14.07.2026 | ரூபா.2500.00 |
| 08 | பிரதேச வைத்தியசாலை பளை | NP/04/45/RDHS-KOC/CM/PALA/ 2026/27/08 | ரூபா.25,000.00 | 14.07.2026 | ரூபா.2500.00 |

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.

TP- 0212285719, Fax- 0212285931 E mail - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com

(CR/47120) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் மையமாகும் மாங்குளம்; வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



**முல்லைத்தீவு, பெப்.25**

**கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, வடக்கு மாகாணத்தின் மையமாக மாங்குளத்தை மாற்றியமைப் பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். மாங்குளம் நகர அபிவிருத்தித் திட்டத்தின் (2026 - 2036) உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வும், முதலாவது பங்குதாரர்கள் கூட்டமும் புதுக்குடியிருப்புப் பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளாவது-

எமக்குக் கிடைக்கும் அரிய வாய்ப்புகளையும், சந்தர்ப்பங்களையும் நாம் உரியமுறையில் பயன்படுத்தி, மாகாணத்தின் மேம்பாட்டுக்காக அர்ப் பணிப்புடன் செயலாற்றவேண்டும். வடக்கு மாகாணத்தின் மையமாக மாங்குளத்தை அடையாளப்படுத்தி, அதற்கான நிலப்பரப்புகளும் ஒதுக்கப்பட்டன. எனினும், அந்தத் திட்டங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

போரின் பின்னர், ஏ-9 பிரதான வீதியில் அமைந்துள்ள மாங்குளம் நகரம் வலுவிழந்த நிலையில் காணப்படுவது கவலைக்குரியது. அதனை மாற்றியமைத்து, நகரத்தை மீளக் கட்டியெழுப்பும் பெரும் முயற்சியின் ஒரு வெளிப்பாடாகவே இந்தத் திட்டம் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி இயங்கும் வடக்கு மாகாணசபையின் பல திணைக்களங் களை, படிப்படியாக மாங்குளத்தை நோக்கி நகர்த்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடக்கு மாகாணம் வளங்கள் நிறைந்ததாக இருந்தும், வறுமை நிலையில் முன்னிலையில் உள்ள முரண்

பாட்டைத் தகர்க்க, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் இந்தத் திட்டம் பெரும் உறுதுணையாக அமையும்-என்றார்.

நிகழ்வில் பிரதேசசபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், செயலாளர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் கொழும்பு தலைமைப் பணிமனை மற்றும் வடக்கு மாகாணப் பணிமனை ஆகியவற்றின் அதிகாரிகள், ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் பங்கேற்றனர். (க-113)



# பார்வையாளர்களை கவர்ந்த அணி நடை

*யாழ்ப்பாணம், பெப்.25*

*யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியின் ஆரம்ப நிகழ்வில், இல்லங்களின் அணி நடையில், பாடசாலையின் சென்.ஜோன் அம்புலன்ஸ் படையணியின் அணி நடை மிக நேர்த்தியாக இடம்பெற்றது. இது சகலரது கவனத்தையும் ஈர்த்ததோடு, பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோரது பாராட்டையும் பெற்றது. இவ்வணி நடை நிகழ்வை நடாத்துவதற்கு பாடசாலை அதிபர் ஒப்புதலை வழங்கியதைத் தொடர்ந்து, படையணிக்கும் பொறுப்பான ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையுடனும், யாழ்.மாவட்ட சென். ஜோன் அம்புலன்ஸினரின் ஆலோசனை வழிகாட்டலுடனும் இவ்வணி நடை ஒழுங்கமைக்கப்பட்டது. இதில் புதிதாக 35க்கும் மேற்பட்ட மாணவிகள் இணைந்து தற்போது 60 க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)*

**காணி விற்பனைக்கு**

மாவிட்டபுரம் 12 பரப்பு காணி 6 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்.
Station 200m முகப்பு தார் ரோட்.
நேரடி தொடர்புகளுக்கு:-
**076 852 9425**
(CR 47118) J-1

**கூலர் வாகனம் தேவை**

10 1/2 " நீளம் உடைய கூலர் (Cooler) ரக வாகனம் வாடகைக்கு அல்லது விற்பனைக்கு தேவை.
தொடர்பு: **077 012 7649**
(CS 31295 B) A

**விற்பனை பிரதிநிதி தேவை**

யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் குளிர்பான வகைகளை விநியோகம் செய்வதற்கு அனுபவமான விற்பனை பிரதிநிதி தேவை.
தகைமை மற்றும் அனுபவத்திற் கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு:
**077 012 7649**
(CS 31295 A) A

# INVITATION FOR BIDS
# THUNUKKAI PRADESHIYA SABHA

1. The **Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Chairman, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukkai** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **Document Issuing/Purchasing Period** | | | **From 25.02.2026 until 10.03.2026** | | | | | | |
| | | **Pre-Bid Conference** | | | **At 10.30 A.M on 04-Mar-2026** | | | | | | |
| | | **Closing and Opening of Bids** | | | **At 14.00 P.M on 11.03.2026** | | | | | | |
| **S/No** | **Bid ID** | **Description of Work** | **Source of Fund** | **Estimated Cost (Rs.) In Million (without VAT)** | **Contract Period (Days)** | **Required CIDA Grade & Speciality** | **Non-Refundable Fee (Rs.)** | **Bid Validity Period up to** | **Required Bid Security Amount (Rs.)** | **Required Bid Security Validity Period** |
| 1 | **MA/NP/MU/TKPS/2026/01** | **Maintenance of Ambalapperumal kulam Aanaivilunthan Road** | **PSDG Fund** | **3.81** | **77** | **C9 above (Highway)** | **1500.00** | **28-Apr-2026** | **60,000.00** | **26-May-2026** |
| 2 | **MA/NP/MU/TKPS/2026/02** | **Maintenance of Thunukkai School Lane & 1st Lane** | **PSDG Fund** | **0.84** | **63** | **C9 above (Highway)** | **1000.00** | **28-Apr-2026** | **10,000.00** | **26-May-2026** |

A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukkai (T.P: 021 228 4532, email: psthunukkai@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. During the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table**. The method of payment will be by cash.

5. Bids (Original & Duplicate) S/No from 01 To 04 must be delivered to the **Chairman, Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai and Bids (Original & Duplicate) S/No from 05 to 07** must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thuukkai on or before 14.00 P.M as stated in table above**. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai**.
6. Pre-Bid Conference will be held at Conference Hall, **Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukai commencing at 10.30 AM as stated in table above.**
7. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Thunukkai Pradeshiya Sabha,**
**Vellankulam Road,**
**Thunukkai.**

**11.03.2026**
(CR 47121) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூதரகங்களிடம்...

பில் 'கிவுல் ஓயா அபாயத்தின் குறியீடா?' என்ற தலைப்பில் திறந்த கலந்துரையாடலொன்று யாழ். ஊடக அமையத்தின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.
இதன்போது, கிவுல் ஓயா திட்டத்தின் ஊடாக தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்படும் விவகாரம் மற்றும் சுற்று சூழல் பாதிப்புகள், யானை - மனித மோதல் போன்ற பாதகமான விளைவுகள் தொடர்பாக ஆராயப்பட்டது. அத்துடன், இந்தத் திட்டத்தின் ஊடாக அரசாங்கம் அடைய நினைக்கும் மறைமுக இலக்குகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.
கலந்துரையாடலின் நிறைவில் ஊடகவியலாளர்கள், அரசியல் தலைவர்கள், பல்கலைகழக மாணவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக இணைந்து எல்லைக் கிராமங்களுக்கு கள விஜயம் செய்வது எனவும், கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பான கூட்டறிக்கையை உள்நாட்டிலுள்ள முற்போக்கு அமைப்புகளுக்கும், சர்வதேச அமைப்புகளுக்கும், தூதரகங்களுக்கும் சமர்ப்பிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.
இந்தக் கலந்துரையாடலில், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், து.ரவிகரன், ப.சத்தியலிங்கம் ஆகியோரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தவத்திரு வேலன் சுவாமிகள், சட்டத்தரணி ஐங்கரன் குகதாசன், மற்றும் பேராசிரியர் எஸ்.ரகுராம், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், எல்லைக் கிராமங்களை சேர்ந்த மக்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-26)

## பொருளாதார...

பிரதியமைச்சர் உபாலி கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டார். அங்குள்ள களநிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்த பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே, பொருளாதார மத்திய நிலையம் மேம்படுத்தப்படும் என்றும், பணிகள் விரிவாக்கம் செய்யப்படும் எனவும் கூறினார்.
கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன், அமைச்சின் அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இந்தக் களஆய்வில் கலந்து கொண்டனர். (அ-ம-113)

## மண்டைதீவு...

கம் அமைக்கும் நடவடிக்கைகளை சுற்றுச்சூழல் அனுமதி பெறப்படும்வரை நிறுத்துமாறு மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை அறிவுறுத்தியுள்ளது. இதனால், அந்தப் பணிகள் கிடப்பில் போடப்படும் சாத்தியங்கள் உருவாகியுள்ளன.
இது தொடர்பில் அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் வாராந்த மாநாட்டில் அமைச்சர் நளிந்த மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணம் - மண்டைதீவில் சர்வதேசகிரிக்கெட் மைதானத்தை அமைக்கும் பணி நிச்சயம் முன்னெடுக்கப்பட வேண்டும். ஒரு திட்டத்தை முழுமைப்படுத்த வேண்டுமெனில் சில அறிக்கைகள் தேவைப்படும். சகல அமைச்சுகளுடன் இணைந்து கூட்டு முயற்சியாக அதற்குரிய நடவடிக்கை இடம்பெறும். மைதானம் அமைக்கும் திட்டத்தை கைவிடும் முடிவை அரசாங்கம் எடுக்கவில்லை. மைதானம் அமைக்கும் நடவடிக்கையை விரைவுபடுத்தவே எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (அ-ம-44)

## நான்கு...

சத்து 2 ஆயிரத்து 900 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.
இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வுட்லர் தெரிவித்ததாவது:-
போதைப்பொருள் ஒழிப்புச் செயற்திட்டம் கடந்த நான்கு மாதங்களாக மிகவும் ஆக்கபூர்வமான முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரை 15 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 900 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரை 526 கிலோ ஹெரோய்னும், ஆயிரத்து 419 கிலோ ஐஸ் போதைப்பொருளும், 3 ஆயிரத்து 548 கிலோ கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், சட்டவிரோத சொத்துக் குவிப்புத் தொடர்பில் 146 விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. 2 ஆயிரத்து 400 பேருக்கு எதிராக தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-44)

## 500,000...

ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு 5 லட்சத்து 5 ஆயிரம் சுற்றுலாவிகள் வருகை தந்துள்ளனர்.
அவர்களில், இந்தியாவில் இருந்து 89 ஆயிரத்து 277 பேரும், பிரிட்டனில் இருந்து 55 ஆயிரத்து 407 பேரும், ரஷ்யாவில் இருந்து 45 ஆயிரத்து 351 பேரும் வந்துள்ளனர். அத்துடன், ஜேர்மனியில் இருந்து 35 ஆயிரத்து 413 பேரும், சீனாவில் இருந்து 231 ஆயிரத்து 621பேரும், பிரான்ஸில் இருந்து 27 ஆயிரத்து 874 பேரும், அவுஸ்திரேலியாவில் இருந்து19 ஆயிரத்து 413 பேரும், கனடாவில் இருந்து 9 ஆயிரத்து 262 பேரும் வருகை தந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது. (அ-ம-44)

## எரியுண்ட...

சடலத்தை அவதானித்த மக்கள் அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதைத் தொடர்ந்தே, நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு அந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
சடலமாக மீட்கப்பட்ட ஆண் 40 தொடக்கம் 45 வரை மதிக்கத்தக்கவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக தகவல்கள் தெரியவராத நிலையில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இந்த விடயத்தில் குற்றப் பின்னணிகள் இருக்கலாம் என்ற கோணத்திலும் ஆராய்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

## தொழில்...

கையின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நீண்டகாலமாக நிலவி வந்த காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் புதிதாகப் பலருக்கு காணிகள் வழங்கப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக மார்ச் மாதம் 4ஆம் திகதி 100 பேருக்குக் காணிகள் வழங்கப்படவுள்ளன.
அத்துடன் தொழில்வாய்ப்புகள் மற்றும் முதலீடுகளுக்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதன்படி, சிறு, மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்காக விசேட தொழில் வலயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தேராவில் பகுதியில் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. பத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முதலீட்டாளர்களுக்கு, அவர்களின் முதலீட்டளவுக்கு ஏற்ப ஒரே இடத்தில் காணிகள் வழங்கப்படும்.
பெரும் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள விரும்புவோருக்காக ஏ35 வீதிக்கு அண்மித்த மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. புதுக்குடியிருப்பு சந்திக்கு அருகிலுள்ள ஒட்டுசுட்டான் வீதிப் பகுதி, தேராவிலுக்கு அண்மித்த பகுதி மற்றும் கோம்பாவில் பகுதி ஆகிய இடங்களில் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. தகுந்த திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் முதலீட்டாளர்களுக்கு காணிகள் வழங்கப்படும்.
பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் 50 லீற்றருக்கு மேற்பட்ட பாலை உற்பத்தி செய்பவர்களுக்கு, கால்நடை மருத்துவரின் பரிந்துரையின் அடிப்படையில் புல் வளர்ப்பதற்காக இரண்டு ஏக்கர் வரை காணி வழங்கப்படும். அதிகம் உற்பத்தி செய்பவர்களுக்கு தேவைக்கேற்ப கூடுதல் காணிகளும் வழங்கப்படும். இதற்கான முன்மொழிவுகளை சிலர் சமர்ப்பித்துள்ளனர் - என்றார். (அ-ம-110)

## புலம்பெயர்...

திப்பை நடத்தினார். இதன்போதே, ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தின் மீதும், பிரதமர் ஹரிணி மீதும் அவர் கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு மாகாணத்தில் தமிழர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் ஹரிணி, 'எங்களிடம் அனுமதிபெற்றா போரை நடத்தினார்கள்?' என்று கேள்வி எழுப்பியுள்ளார். நாங்கள் தமிழர்களுக்கு எதிராகப் போரிடவில்லை. பயங்கரவாதிகளுக்கு எதிராகவே போரிட்டோம். நாட்டுக்காகப் போராடியவர்களை அவமதிக்கும் வகையில் பிரதமரின் கருத்துகள் அமைந்துள்ளன.
புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் கொள்கையை இலங்கையில் விதைக்கும் வகையில் பிரதமர் செயற்பட்டு வருகின்றார். இதை நாட்டு மக்கள் நன்றாகவே உணர்ந்துள்ளனர். அரசாங்கம் தனது இயலாமையை ஏற்றுக் கொள்ளத் தயாராகவில்லை. தமது தோல்விகளை மறைப்பதற்காக அவர்களுக்கு இத்தகைய கருத்துகள் தேவைப்படுகின்றன - என்றார். (அ-ம)

## ராஜீவ்...

துள்ளார். ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
38 ஆண்டுகளுக்கு முன்பு இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான வேளையில் நாங்கள் இந்தியாவைத் தீர்க்கமாக எதிர்த்தோம். எமது எதிர்ப்பு ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் எதிரானது அல்ல. மாறாக, ராஜீவ் காந்தி அரசாங்கத்தின் செயற்பாடுகளையே எதிர்த்தோம். நாம் அந்த அரசாங்கம் பின்பற்றிய அரசியல் கொள்கைகளையே எதிர்த்தோம் - என்றார். (அ-ம)

## தூக்குத்...

தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே, தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கவில்லை என்றும், அது தொடர்பில் அரசாங்க மட்டத்தில் தற்போது எவ்வித முன்னெடுப்பும் இல்லை எனவும் கூறினார்.
தூக்குத் தண்டனையை அமுல்படுத்துவது என்பது பாரதூரமான விடயம். அவ்வாறான விடயங்களில் அமைச்சரவை மாத்திரம் தீர்மானம் எடுக்கமுடியாது. இதுதொடர்பில் பொதுமக்களிடையே பரந்தளவிலான கலந்துரையாடல்கள் அவசியம். அத்தகைய கலந்துரையாடல்கள் இல்லாமல் தீர்மானங்கள் எடுக்கப்படாது என்றும் அமைச்சர் நளிந்த தெரிவித்தார்.
இதேவேளை, தனது ஒரு கையொப்பத்தின் மூலம் ஒருவரின் உயிரைப் பறிப்பதில் தனக்கு உடன்பாடு இல்லை என்று ஜனாதிபதி அநுர ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றும் வேளையில் கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## கிவுல்...

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற பிரஜாசக்தி உறுப்பினர்களுக்கான நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் சந்திரசேகர் மேலும் தெரிவித்ததாவது:-
கிவுல் ஓயா திட்டத்தை வைத்து பல்வேறு விதமான கருத்துகள் பரப்பப்படுகின்றன. சிங்களக் குடியேற்றத்தை நோக்கமாகக் கொண்டு கிவுல் ஓயா திட்டம் அமைக்கப்படவில்லை. மாறாக, விவசாயத்தை மேம்படுத்துவதற்காகவே அந்தத் திட்டம் கொண்டுவரப்படுகின்றது. அங்கு குடியேற்றங்களை மேற்கொண்டால் தமிழ்க் குடியேற்றங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். கடந்த அரசாங்கங்களில் இடம்பெற்ற ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பில் நாங்கள் தீர்க்கமாக விசாரித்து வருகின்றோம். ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் கடந்த அரசாங்கங்களைப் போன்றதல்ல. இந்த அரசாங்கத்தில் வெளிப்படைத்தன்மை உள்ளது. மக்களின் நலனுக்கு முன்னுரிமை வழங்கியே அனைத்துத் திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார். (அ-ம-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர சாரதி அனுமதி அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை

கொழும்பு, பெப்.25
தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்களை வைத்திருந்த 4 இலட்சம் பேருக்கு நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத் தின் ஆணையாளர் நாயகம் கமல் அமர சிங்க தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் நிலவிய சாரதி அனுமதிப்பத்திர அட்டைத் தட்டுப்பாடு காரணமாக, சாரதி களுக்கான பரீட்சையில் சித்தியடைந்த வர்களுக்கு தற்காலிக அனுமதிப்பத்திரங்களே வழங்கப்பட்டிருந்தன. தற்போது அந்த நடைமுறையின் கீழ் தற்காலிக அனுமதிப்பத்திரங்களைப் பெற்றவர்களுக்கு நிரந்தர அட்டைகளை வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே 4 இலட்சம் பேருக்கு நிரந்தர அட்டைகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், மேலும் ஒரு இலட்சம் அட்டைகள் அச்சிடப்பட்டுத் தயாராக உள்ளன. இவை எதிர்வரும் நாள்களில் விநியோகிக்கப்படும். எதிர்காலத்தில் சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க மேலதிகமாக 10 இலட்சம் அட்டைகளை இறக்குமதி செய்வதற்கான கொள்முதல் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. இந்த அட்டைகளை விரைவில் இறக்குமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

(எ-இ)

## ஊழல் நிறைந்த பாதையில் பயணிக்கிறது அரசாங்கம்

*திலித் ஜெயவீர கண்டுபிடிப்பு*

கொழும்பு, பெப்.25
தற்போதைய அரசாங்கமானது ஆட்சிக்கு வருவதற்கு முன்பே ஊழல் முத்திரையுடன் வந்த ஒரு அரசாங்கம், இன்று முன்னெப்போதையும் விட பெரும் ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபடுகின்றது என்று சர்வஜன அதிகாரம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜெயவீர குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ள நிலக்கரி கொள்வனவு தொடர்பான மோசடியை நாம் ஆரம்பத்திலிருந்தே அவதானித்து வருகிறோம். இது ஒரு திட்டமிட்ட ஊழல் என்பது முதற்கட்டத்திலேயே தெளிவாகத் தெரிகிறது. இந்த நிலக்கரிக் கொள்வனவு முறைமையை தாம் அறிமுகப்படுத்தவில்லை என அரசாங்கம் தட்டிக்கழிக்க முயல்கிறது. ஆனால் ஊழல் நிறைந்த அதே பழைய பாதையிலேயே இந்த அரசாங்கமும் பயணிக்கிறது. நாட்டு மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும்போது அதனைத் தடுக்க நாம் மக்களை அணிதிரட்டுவோம்-என்றார். (எ-இ)


**காணி விற்பனைக்கு**

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு (Service Station அருகாமையில்) உள்ள 1.64 பரப்பு சுற்று மதிலுள்ள காணியில் குழாய் கிணறு வசதியுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 076 030 3887

(CS/60844) J-1

**விற்பனைக்கு**

நல்லூர் - யாழ் நகரை அண்மித்த பகுதியில் பழைய வீடு ஒன்று ஒப்பந்தக்காரர்களுக்கு (கட்டிடம், கூரை, கதவு, ஜன்னல், நிலை... என்பன) விற்பனைக்கு உள்ளது.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 616 7805

(CS/31280) J-1

**பெண் ஊழியர் தேவை**

மென்பான உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு உற்பத்தி பகுதியில் வேலை செய்வதற்கு பெண் ஊழியர்கள் தேவை. மானிப்பாய், கொக்குவில் பகுதிகளுக்கு அருகாமையில் இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 810 3373, 077 078 3289

(CS 31291) A

**உடனடி வேலைவாய்ப்பு**

Restaurant ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
- WAITER
- KITCHEN HELPER
- MEAT/ VEG CUTTER

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
தேவைப்படின் தங்குமிடம் வழங்கப்படும்.
வெளிமாவட்டத்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:- 076 175 4225

(CS/60851) J-1

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டிப் பகுதியில் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
- 1½ பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 8 இலட்சம்
- நிலப்பரப்பு நல்ல சூழல்

தொடர்பு: 076 990 3039

**50 வருடங்களாக**

**ஈசன்ஸ்**

அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில்
- ஐயர்
- மேளம்
- Band
- கிரியை மண்டபம்
- உயிர்ப்பு, அலங்காரம்
- வெள்ளை நிலவிரிப்பு
- கதிரை
- பந்தல்
- பாடை கார்கள்
- மலர் வளையம்

ஈசன்ஸ் அந்தியகால சேவை
148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695, 077 429 0613




அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள்
**RATNAM BROTHERS**

No- 291, Stanly Road, Jaffna. 0212226185, 076 771 9197

Pointpedro Road, Nelliyady. 077 734 0056, 077 203 3135

Sri Lanka's Sole Authorised Distributor Stafford Motor Co. (Pvt) Ltd.
Corporate Office - Maradana 718/7, Maradana Road, Colombo 10. 011 760 7200

Mannar - 077 672 2084
Vavuniya - 024 700 1059

**வரவேற்பாளர்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு இரவு நேர வரவேற்பாளர்கள் ஆண்கள் தேவை.



நேரில் சமுகமளிக்கவும்
காலம் :- 26.02.2026 மற்றும் 27.02.2026
நேரம்:- காலை 09.00 - 01.00, 03.00 - 05.30 வரை

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.